# சாளரம்

இளையோர் திங்கள் இதழ் | மே — யூன் 1993 | விலை 12 ரூபா

யாழ்ப்பாணம்



சந்திப்பு

சிறுகதை





வடமராட்சி கிழக்கு கல்வி நிலை..

உங்கள் விருப்பத்திற்கேற்ற சுவையான அரிசி
வகைகளை தரம் பார்த்து பெற்றுக்கொள்ளுங்கள்

குத்தரிசி தரம் I, II

சம்பா அரிசி

உடைத்த பச்சை அரிசி

தீட்டுப்பச்சை அரிசி

V
V
V
V

# செல்வகுமரன் அரிசி ஆலை

உடுவில் தெற்கு - மானிப்பாய்

---

முரசுமோட்டையில் முத்தான ஓர் நிறுவனம்!

- உழவு இயந்திரம்
- மோட்டார் சைக்கிள்
- துவிச்சக்கர வண்டி
- நீரிறைக்கும் இயந்திரம்
- தெளி கருவி

ஆகியவற்றினது உதிரிப்பாகங்களும் மற்றும், பெயின்ட், பற்றரி, இரும்புப் பொருட்களின் விற்பனையாளர்கள்.

## ஜெயா இரும்பு ஸ்தாபனம்

2ம் கட்டை, முரசுமோட்டை பரந்தன்

(உரிமையாளர் திரு. கு. அழகரெத்தினம்)

எவ்வளவோ ஆசைகளை நெஞ்சில் சுமந்தபடி எங்கள் தாயோடும் அன்புத் தந்தையோடும் அருமை மிகு உடன்பிறப்புக்களோடும், பாசத்துக்குரிய மனையாளொடும், நேயத்திற்குரிய மக்களோடும் ஊரோடும், உறவோடும் சேர்ந்து உண்டு உறங்கிக்களித்து வாழுகின்றவர்கள் நாங்கள்.

விதைகளாய் வடலிகளாய் பருவத்துப் பாளைதள்ளும் மருந்தாய், விருந்தாய், பெரியதாய் வளரும் தமிழீழ முது சொத்துக்களான பனையின் பயன்படு பொருட்களின் சிறப்புக்களை அறியாது வாழ்வதும்நமக்குத் தெரிந்தது தான்.

வயதில் பெரியவர்கள் தங்கள் வாழ்வியல் உண்மைகளை குழந்தைகளுக்குக் கொடுக்க மறந்துபோவதால் பெறுமதிபெற்ற உடல்நலக் கருத்துக்கள் எம்மை விட்டும் ஓடிப்போகின்றன. நூற்றாண்டுக்கு முன்னர் பதிப்பிக்கப்பட்ட 'பதார்த்த குணசிந்தாமணி' எனும் நூலிலிருந்து பெற்ற சில பாடல்களைக் காணின்-

.. 'சங்குபனை வெல்லத்தால் வாதபித்தம் அறும்
சன்னிநோய் வல்லரிசிகுன்மமறும்''.

# பனை வெல்லம் பயன் சொல்லும்

'மேகவனலும் மிகவீசு சூரிகையர்
வாகமுறுகனலும் மாறும் காண் - மோனத்திற்
தங்கிவரும் நீர்சுருக்குத் தாகவெப்பமும் தணியும்
மிக்கு பனங்கற்கண்டுக்கே' - பனங்கற்கண்டு பற்றிய, பனைவெல்லத்தைப் பற்றிய பாடல்கள் இவையாகும்.

இன்று தமிழீழத்திலே ஏற்படுத்தப்பட்ட போரின் அழுத்தத்தினால் தமிழ் மக்களை வருத்தும் நோய்களுக்கான மருந்துகள் எம்மிடை இல்லாதுள்ளது. நீரழிவு - குன்மம் (ULCER) மார்பு எரிச்சல், உடல்சூடு, பித்தம், கிரந்தி நோய்களுக்கும், குறிப்பாகக் குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல், மந்தம் குக்கல் ஆகிய நோய்களுக்தம், மருந்தாகப் பயன்படும் பனங்கற்கண்டு (கல்லக்காரம்) 1990ல், 102கிலோவாக - 1991ல் 1265கிலோ நிறையாக - 1992ல், 52கிலோ எனும் விகிதத்தில் உற்பத்திச்சரிவை எட்டியுள்ளது.

இதற்கான காரணம் என்ன? இவற்றுக்கானபொறுப்பை உற்பத்தியாளரே ஏற்கவேண்டும் எனக் கூறலாமா? உற்பத்திப் பொருட்களை வாங்க வேண்டிய மக்கள் அப்பொருளின் பெறுமதி கருதி வாங்காது இருப்பதும் இந்நிலை வரக் காரணம் என்றே கொள்ளவேண்டும்.

மக்களுடைய தேவைக்கு ஏற்றவாறு விளங்கும் உற்பத்திப் பொருட்களே விற்பனையில் முதன்மை பெறும். இதற்கு பனைவெல்லம் உணவு உறபத்தியே உதாரணம் என்கிறார் திரு ரி சபாரத்தினம் அவர்கள். பனை தென்னை வள அபிவிருத்தித்துறைப் பொறுப்பாளராக இருக்கும் இவர் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகத் தொழிற்படுகின்றார்.

"மிக நீண்ட காலமாக குடிசைத்தொழிலாக இருந்த பதநீர், பனங்கட்டி, பனைவெல்லம் உருவாக்கல்முறை இப்போது புதியவடிவம் பெற்ற தொழிலாக ஏற்றம் கண்டுள்ளது.

(04ம் பக்கம் பார்க்க)

## இந்த இதழில்

☐ பனை வெல்லம் பயன் சொல்லும்
☐ இயலிசை வாரிதி திரு. ந. வீரமணி ஐயருடன் ஓர் இனியசந்திப்பு
☐ சிறுவர் மீதான பாலியல் வன்முறை
☐ பகலவன் பதில்கள்
☐ கையெழுத்துப் பிரதிகளிலிருந்து......
☐ எங்கும் ஆண் மேலாதிக்கம்
☐ தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழ் 'வீடியோ' திரைப்படங்களும்
☐ விளையாட்டு
☐ உலகின் தலை சிறந்த பாடசாலைகள் 10
☐ சிறுகதை
☐ மொன்றோ கோட்பாடு
☐ குழந்தையும் முதல் ஆண்டு உணவும்
☐ வடமராட்சி கிழக்கில் வளராத கல்வி நிலை
☐ அரும்புகள் — தெறிப்பு
☐ ஆசிரியர் தலையங்கம்

1993 யாழ்ப்பாணம்



# 'இயலிசை வாரிதி' திரு. ந. வீரமணிஐயருடன் ஓர் இனிய சந்திப்பு

இம்முறை 'சாளரம்' இதழுக்கென ஓர் 'நேர்காணலை' நிகழ்த்துவதற்காக பிரம்மஸ்ரீ திரு. ந. வீரமணி ஐயர் அவர்களைச் சந்திக்க இணுவிலிலுள்ள அவரின் இல்லத்திற்குச் சென்றோம்.

மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர் எம்மை வரவேற்றார். அவரின் கலையுலக அனுபவங்களை அறிந்து கொள்வதற்காக நாம்கேள்விகளை தொடுக்கு முன்பு-

அவர் இல்லத்திற்குள் எம்மை அழைத்துச் சென்றார். சுவர்களை ஆக்கிரமித்துக் காணப்பட்ட படங்களும், ஐயர் அவர்களுக்கு கிடைத்த சான்றிதழ்கள், வாழ்த்து மடல்கள், கைப்படங்கள் என்பனவும் அவரின் கலை அனுபவங்களையும், அவருக்கு கலையுலகில் கிடைத்த புகழ்ச்சிகளையும் எமக்குப் பறை சாற்றின.

தாங்கள் ஆரம்பகல்வியை எங்கு கற்றீர்கள்? கலையுலகுடன் எவ்வாறு ஈடுபாடு வந்தது? எப்போது இந்தியா சென்றீர்கள்? நாம் கேள்விகளைக் கேட்க அவர் பதிலளித்தார்.

''ஆரம்பக்கல்வியை இணுவில் அம்பிகைபாக வித்தியாசாலையிலும், சைவ மகாஜன வித்தியாசாலையிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பயின்றேன். எனது தந்தையார் மா. த. நடராஜ ஐயர் லண்டன் மெட்ரிக் படித்தவர். இணுவில் கிராமத்திலிருந்து இசைக் கல்வியை பரப்பியவர். வயலின் இசைக்கலைஞர். இந்திய கலைஞர்கள் செம்பை வைத்தியநாதர், முசிறி சுப்பிரமணியம் ஐயர், மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் ஆகியோருடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணியவர்.

வேதாரணியம் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கு பற்றியவர். ஆகவே, என்னுடைய குடும்பச் சூழல் இயல்பாக என்னுள் கலையார்வத்தை உண்டு பண்ணியது.

1951ஆம் ஆண்டு உயர்கல்வி பயில்வதற்காக (B.Sc.) இந்தியாவிற்குச் சென்றேன். இசை, நாட்டியம் என்பனவற்றில்ஈடுபாடுஅதிகமாக அடையார் கலாசேத்திரத்தில் முழுநேர மாணவனாகி நிறைமைச் சித்தியடைந்தேன்''

நாம் அடுத்த கேள்வியைக் கேட்கத்தொடங்கு'முன் உள்ளே சென்று சில கடிதக் கோவைகளை எடுத்து வந்து காட்டினார்.

அந்தக் கோவையினுள் ஐயர் அவர்களைப் பாராட்டி அனுப்பிய கடிதங்கள் கட்டுக்கட்டாக காணப்பட்டன. காலஞ் சென்ற இந்திய முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி போன்ற அரசியல்வாதிகள் தொடக்கம் ரி. எம். சௌந்தரராஜன், சீர்காழி எஸ். கோவிந்தராஜன் போன்ற பாடகர்கள் வரை பலர் எழுதிய பாராட்டுக்கடிதங்கள் அவை.

நாம் கேள்வி கேட்கும் அவசியமின்றி அவர் தொடர்ந்தார்.

''ருக்மணிதேவி அம்மையார் (அப்போதைய கலாசேத்திர அதிபர்) அவர்களிடம் பரதநாட்டியம் பயின்றேன். எம். டி. இராமநாதன் அவர்களிடம் சங்கீதம் கற்றேன்; சிறீ பாபநாசம் சிவம் அவர்களிடம் சாகித்யம் கற்றேன். தமிழை சா. கு. கணபதி ஐயர் அவர்களிடமும், பேராசிரியர் விஸ்வநாத ஐயர் அவர்களிடமும் கற்றேன். கலாசேத்திரத்தில் மாணவனாக இருந்த போதே மயிலைக் குறவஞ்சி என்கிற நாட்டிய நாடகத்தை அரங்கேற்றினேன். இதனை அரங்கேற்றம் செய்து வைத்த கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் 'His Masters Voice' நிறுவனத்திற்கு என்னை அறிமுகம் செய்துவைத்தார். எனது சாகித்யங்களிற்கு அக்காலத்தின் பிரபல சங்கீத வித்துவான்களின் பேராத

ரவு இருந்தது. H. M. V. நிறுவனத்தினர் என்னை சாகித்ய கர்த்தாவாகவும் இசையமைப்பாளராகவும் அங்கீகரித்தனர்''.

'தித்திக்கும் தேன் தமிழில் நவரசமுடன் பக்திரசமும் ததும்ப இலக்கணச் சுவைகுன்றாது மயிலைக் குறவஞ்சி என்ற சிறிய - அரிய நூலிழைத்துக் கூடு கட்டியிருக்கும் அற்புதச்சிலந்தி நமது வீரமணி என்னும் அடையார் கலாசேத்திர மாணவர், - மயிலைக் குறவஞ்சிக்கு பாபநாச சிவன் அவர்கள் வழங்கிய ஆசிர்வாதம் இது.''

**உங்களின் புகழ்பரப்பிய பாடலான கற்பக வல்லி பற்றி...?**

'' ஆம் சொல்கிறேன். H. M. V. நிறுவனத்துடன் நான் பணியாற்றிய போதுதான் எனக்கு சீர்காழி கோவிந்தராஜன், ரீ. எம். சௌந்தரராஜன் ஆகியோரினது நட்பு ஏற்பட்டது. அப்போது நான் புனைந்த 'உன்னை நான் காண்பதெங்கே' என்ற பாடல் சீர்காழி பாடி ஒலிப்பதிவானது. அடுத்து ரீ. எம். எஸ். பாடிய 'கற்பகவல்லி நின் பொற்பதங்கள் .' என்று தொடங்கும் எனது பாடல் பிரபலமானது. இப்பாடல் மயிலாப்பூர் கபாலேஸ்வரன் ஆலயத்தில் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் அறிகிறேன். பதினாறு இராகங்களை வைத்து ஓர் பாடல் புனைத்தேன். அது மகாராஜபுரம் சந்தானம் அவர்கள் பாடி புகழ் பெற்றது. இன்னும், அறுபத்துமூன்று நாயன்மார்களின் சரித்திரங்களை நாட்டியமாக (30 நிமி) செய்தேன். இக்கலைப் பொக்கிசம் இந்திய இராணுவம் இங்கிருந்த காலத்தில் அழிந்து போய்விட்டது.''

வீட்டினுள் சென்று சில ஒலிப்பதிவு நாடாக்களை கொண்டுவந்து எம்மிடம் காட்டி -''இதுஎனது மாணவி சிவசக்திசிவநேசன் லண்டனில் இருந்து பாடி வெளியிட்டநாடாக்கள் என்றுபெருமையுடன் சொன்னார். அதிலே ஒரு நாடாவில் 'எனது குருவான பிரம்மசிறீ வீரமணி ஐயர் அவர்களுக்கு சமர்ப்பணம், என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. அதனை பாடல்



பிரபல இந்திய வீணை வித்துவான் எஸ் பாலச்சந்தர் அவர்களுடன்.



தனது, மாணவி செல்வி சிவசக்திக்கு ஆசிவழங்குகிறார்

கருவியில் போட்டுக்கேட்டோம். இனிமையான சங்கீதம். தொடக்கத்தில் 'சங்கீதத்துறையில் வீரமணிஐயர் அவர்கள் ஒரு பெரியமேதை, என அவரது மாணவி அவ்வொலி நாடாவில் கூறுகிறார்.

**தாங்கள் தற்போது சங்கீதம் பற்றிய நூல் ஒன்றை எழுதி வருவதாக அறிந்தோம்...**

''ஆம் கர்நாடக சங்கித பாரம்பரிய பாடல்களை, பாரம்பரிய இராகங்களில், பாரம்பரிய தாளங்களில் அமைத்து நூலுருவாக்கியுள்ளேன். பக்தி ரசப் பாடல்களாக 72 மேளகர்த்தா இராகங்களில் 72 பாடல்களை உருவாக்கி சுரப்படுத்தியுள்ளேன். 35 தாளங்கள், 175 தாளங்கள், போன்ற தாள நுணுக்கங்களில் ஒவ்வொரு தாளத்திற்கும் ஒவ்வொரு பாடலாக இணைத்து இசையமைத்துள்ளேன். இந்நூல் இப்போது பிரசுரத்திற்கு தயாராகவுள்ளது.

சுமார் 300க்கு மேற்பட்ட நாட்டிய நாடகங்கள் 800க்கு மேற்பட்ட சேத்திரங்களுக்கான 108கீர்த்தனைகளைக் கொண்ட, மூன்று பாகங்களைக் கொண்ட நூல்களை எழுதியுள்ளேன். தமிழீழத்திலுள்ள 387 திருக்கோவில்களுக்கு 200க்கு மேற்பட்ட திருவூஞ்சல் பாக்கள் நூற்களாக பிரசுரமாகியுள்ளன.

விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் ஒன்றையே குறிப்பதாகவும். அவை மனிதவாழ்வில் ஒரே இலட்சியத்தை தருவதாகவும் விளக்கி 'ஆத்மீக விஞ்ஞானம்' என்ற நூலை ஆக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளேன்.''

வீரமணி ஐயர் அவர்களைப் பற்றியும், அவரது சாதனைகள், ஆற்றல்கள் குறித்தும் அவரின் கலையுலக

அனுபவங்கள் பற்றியும் விரிவாக எழுதுவதானால் ஒரு பெரிய புத்தகம் எழுதலாம். 'இயலிசை வாரிதி, சாகித்ய சுரமணி, சாகித்ய சாகரம், கவிமாமணி, போன்ற சுமார் 17க்கு மேற்பட்ட பட்டங்கள் இவருக்கு தகமை சார் அமைப்புகளாலும், அறிஞர்களாலும் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளன.

சாகித்ய துறையில் மேதையான ஐயர் அவர்கள் எவ்வித பெருமையுமின்றி அனைவரோடும் சமனாகப்பழகும் இயல்புடையவர். குழந்தை மனமுடையவர். அவரின் துணைவியார் குடும்ப வாழ்வில் மட்டுமல்லாது கலைவாழ்விலும் அவருக்கு ஊக்கமளிப்பவராகவுள்ளார்.

''தமிழீழ சமுதாயம் பண்பாட்டு ரீதியாக உயர்நிலை யெய்த வேண்டுமென்ற நோக்கில் அவ்வப்போது எத்தகைய உணர்ச்சி நிறைந்த பாடல்கள் வேண்டுமோ அத்தகைய பாடல்களை காலத்திற்கு காலம் வழங்கி வருகின்றேன். எமது நாட்டின் எதிர்கால சமூகம் வீரமும், தீரமும், நேர்மையும், நீதியும், கலையும், கல்வியும், பண்பும், பண்பாடும் நிறைந்து வளர வேண்டும் என்கிற எண்ணத்துடன் எனது சிற்றறிவுக்கு எட்டியவரையில், அவ்வப்போது கவிதையாக இசைநாடகமாக, நாட்டிய நாடகமாக, தெருக்கூத்தக்களாக, வில்லுப்பாட்டுக்களாக கிராமியஇசை வடிவங்களாக தந்துள்ளேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரத்தையும், தீரத்தையும் மக்களுக்கு எடுத்துக் காட்டும் பொருட்டும் அரச படையின் அக்கிரமங்களையும் அநீதிகளையும் விளக்குமுகமாகவும் யதார்த்த பூர்வமாக 'கொடியோரின் கொடுமை' என்னும் நாட்டியநாடக ரூபமாக்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவினைச் சேர்ந்தோரை பாத்திரங்களாக்கி நடிக்க வைத்து அதனை நெறிப்படுத்தி இசையமைத்து நாட்டிய அமைப்பையும் செய்து தமிழீழ கலை பண்பாட்டுக்கழகம் நடத்திய முதலாவது முத்தமிழ் விழாவிலே அரங்கேற்றம் செய்தேன். தமிழீழ மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களை இது பெற்றது. புராண, சரித்திர, இதிகாச கதைகளையே நாட்டிய நாடகமாக அமைக்கும் மரபு ஒன்று இருந்தது. ஆனால் யதார்த்தபூர்வமான சமூகப் பின்னணிகளை வைத்து நாட்டிய நாடகமாக அமைத்தபாங்கு பழமையில் புதுமை காண்பதாக அமைகிறது.

எமதுமண் சுபீட்சமடைய வேண்டும். அது சுபீட்சம் பெற எவ்விதமான பணியினை நான் நல்க வேண்டுமோ, எதனை சாதிக்க வேண்டுமோ, அதனைச்சாதிக்க எவ்வேளையிலும் தயாராகவுள்ளேன்''

இவ்வாறு கூறி எம்மிடம் விடை பெற்றுக்கொண்டார் திரு. வீரமணி ஐயர் அவர்கள். □

—விவேக்

## பனை வெல்லம் பயன் சொல்லும்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் எமது மொத்தப் பனை வளத்தின் கணிசமான பங்கினை பதநீர் பெறப் பயன்படுத்துவதன் மூலம், நமது மண்ணில் ஊட்டம் மிகுந்த வெல்ல உணவு உற்பத்தி செய்யும் ஓர் பெரும் தொழிற்துறைத் தோற்றத்தினை ஏற்படுத்திவிடமுடியும். பதநீர் இறக்குதலில் மனித உழைப்பே தேவைப்படுகிறது. ஆனால் அதை வெல்லமாக மாற்றி அமைக்க பல செலவுகள் ஏற்படும். கூடவே தொழில் உபகரணங்களும் தேவைப்படும்; எனவே தொழிலாளர்களின் கூட்டு முயற்சியும், தொழில் நுட்ப அறிவும் ஒன்றாகியே இயங்கும் இத் தொழிலை வளர்த்திடத் தேவையானது மக்களுடைய ஆதரவுதான்.

தாங்கள் உருவாக்கும் பொருள் சந்தைக்கு வந்து உடனடியாகத் தீர்ந்து விடுமென்றால் - பொருளை உருவாக்க உற்பத்தியாளர் ஏன் விரும்பமாட்டார்கள்.

உற்பத்தியாகும் வெல்லம், சீனி, பனங்கற்கண்டு, பாணி ஆகியன பல்வேறு நிறுவனங்களுக்கூடாக விற்பனை விநியோக ஊடங்களுக்கூடாகவே நுகர்வாளரிடம் சென்று சேரும். இவ்வகையில் விரைவாகத் தொழிற்படுவதும், தொழில் அக்கறை, பொருளின் தேவை குறித்த அறிவு கொண்ட விற்பனையாளர்களே வெல்லத் தொழிலை உற்பத்தியைப் பெருக்குபவர்களாக மாறுகின்றார்கள்.''

பதனீர் உற்பத்தியாளர், தொழிற்கருவிகள் உருவாக்குவோர் வெல்லம் விற்போர் ஆகியவர்களின் கூட்டான செயலு -ன் - நுகர்வோரின் ஆதரவு ஏற்படின் தளர்வற்ற முறையில் இவ்வுபற்த்தி பெருகும்.'' என்கிறார் இவர்.


*1990ல் – 3565* கிலோ பனை வெல்லமும், *1991ல் 97386* கிலோவும், *1992ல் 100847* கிலோவெல்லமும் உருவாகி - மக்களாலும் உண்ணப்பட்டிருக்கின்றது என்பதும்; *1991ல் 15906* கிலோ பனஞ் சீனியும், *1992ல் 13054* கிலோ சீனியும் உருவாகிச் சந்தையில் தீர்ந்துவிட்டதும் உற்பத்தியை ஊக்கப்படுத்தியுள்ள வெற்றிகளின் அறிகுறிகளாகும்.

ஊட்டச் சத்து நிறைந்ததும் உயிர்சத்துகளைக் கொண்டதுமான பனைவெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு இவைகளை உணவோடு சேர்த்து உண்பவர்கள் உடல் உறுதிபெற்று வாழ்வர் என்பது மருத்துவர்களின் முடிவாகும். பனைவெல்லம் எம் மனங்களை வெல்லும் பொருளாக மாறட்டும்- எம் பொருள் நலம் உயரட்டும். ◘

—மு.இ.யோ.

உலகின் பல நாடுகளிலும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் பரவலாக இடம்பெற்று வருகின்ற செய்திகளை நாம் அறிந்திருக்கின்றோம். இன்று உளவியல் நிபுணர்களினதும் மனநோய் மருத்துவர்களினதும் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ள பிரச்சினை சிறுவர் மீதான பாலியல் வன்முறையாகும். இதிலும் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றவர்கள் சிறுமிகளே.

# சிறுவர் மீதான பாலியல் வன்முறை



உலகின் பத்து குழந்தைகளில் ஒருகுழந்தை பாலியல் வக்கிரங்களுக்கு ஆளாவதாக உலக சுகாதார நிறுவனம் மதிப்பிட்டிருக்கிறது. தாங்கள் நம்பிய உறவினர், வேலையாட்கள், பக்கத்துவீட்டுக்காரர், ஆசிரியர்கள், இவ்வாறான வக்கிர செயல்களில் ஈடுபடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இவ்வாறான பாதிப்புக்களை சரியாக மதிப்பிட முடியாமல் உள்ளது. பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் இது குறித்து முறையிடத் தயங்குகிறார்கள். குற்றவாளிகளை சட்டத்தின் கைகளில் ஒப்படைக்கவும் பின் நிற்கிறார்கள். இது வெளியே தெரிவது அவமானமெனவும் நினைக்கிறார்கள்.

நாட்டை எதிர்நோக்கும் மிகப்பெரிய சமூகப் பிரச்சினை இதுவென பெரும்பான்மையான நிபுணர்கள் கருதுகின்றனர்.

இந்தியாவில் வெளியே சொல்லப்படும் ஒவ்வொரு சம்பவத்திற்கும், வெளிவராத நூறு சம்பவங்கள் இருக்கின்றன என இந்திய பிரபல சமூகவியல் நிபுணர் ஒருவர் கூறுகின்றார்.

அண்மையில் புதுடில்லியில் பாலியல் வன்முறை புள்ளி விபரங்கள் குறித்து ஆய்வு செய்த போது பதிவு செய்யப்பட்ட பாலியல் வன்முறை வழக்குகளில் 54 வீதம் 15 வயதிற்குட்பட்ட சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் என கணக்கிடப் பட்டுள்ளது. இதில் அதிர்ச்சி என்னவெனில் இவர்களில் 80 வீதமானோர் தங்களுக்கு நன்கு தெரிந்தவர்களினாலேயே பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

உலகெங்கும் காணப்படும் பெண்குற்றவாளிகளில் பலர் குழந்தைப் பருவத்தில் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டவர்கள் என உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

சிறு வயதில் ஏற்பட்ட இக்கொடுமையான நிகழ்வுகளின் தாக்கங்கள் ஆழ் மனதில் ஆறாத காயமாக பதிந்து விடுகின்றன. பாலியல் கொடுமைகளை புரிபவர்கள் கூட பரிதாபமானவர்கள், வாழ்வில் நிம்மதி இல்லாதவர்கள், மனநலம் குன்றியவர்கள், இவர்களே சிறுவர்களாக இருந்த போது பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகி இருக்கலாம் எனவும் உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

சிறுவயதிலும், வளர்ந்த பின்பும் பாலியல் வன்முறைக்குள்ளாகும் பல பெண்கள் பின்னர் மனநலம் குன்றியவர்களாக, மன நோயாளிகளாக சமூகத்தில் நடமாடுகின்றனர்.

எமது தமிழீழ பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகளின் போது, குறிப்பாக இந்திய இராணுவம் இங்கிருந்த காலங்களில் பல பெண்கள் இப்பாதிப்புக்கு உள்ளாகியிருக்கலாம். தென் தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவத்தால் தற்போதும் தமிழ் பெண்கள் பாலியல் வன்முறக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் வாழ்வில் மிக மோசமான காயம் ஏற்பட்டு விட்டதாக அவர்கள் உள்ளுக்குள் குற்றவுணர்வுடன் நடமாடலாம். வெளித்தோற்றத்தின்மூலம் கண்டுபிடிக்கப்பட முடியாத மன நோயாளிகளாக இவர்கள் இருக்கலாம். இதற்கு நமது சமூகத்தில் உள்ள 'கற்பு' சம்பந்தப்பட்ட கடுமையான நம்பிக்கை முக்கியமான காரணியாக அமைகிறது.

கர்நாடகத்தில் சமூகசேவகியான நாற்பது வயது பெண்மணியொருவர் தனது பன்னிரண்டு வயதில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார். இவர் தனக்குத்தானே தண்டனை கொடுப்பதாக எண்ணி

திருமணம் செய்துகொள்ளாமலேயே வாழ்கிறார். மற்றொரு நாற்பது வயதுப் பெண்மணி தனது ஒன்பது வயதில் தனது நெருங்கிய உறவினர் ஒருவரால் பாலியல் கொடுமைக்குள்ளாக்கப்பட்டதால் தான் அசுத்தப்பட்டுவிட்டதாக குற்றவுணர்வு கொண்டு அந்த 'அசுத்தத்தை' போக்க ஒரு நாளைக்கு நான்கு முறை குளிக்கிறார். இன்னும் சிலர் தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபடுகின்றனர். இவ்விபரங்களை ஓர் இந்திய சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது. இவர்களைப் போன்ற மனநோயாளிகள் எமது மண்ணிலும் வெளியே தெரியாமல் இருக்கலாம்.

ஆனால் இந்நிலமைகளிலிருந்து வெற்றியடைந்த பெண்களுமுண்டு. இதற்குவழி, மனதிலுள்ள குற்றவுணர்வுகளைக் களைந்து விடுதல்தான். இவ்வாறான சம்பவங்களை மனதிலிருந்து அகற்றிவிடவேண்டும். இந்தப் பாதிப்புக்கள் எல்லாம் தற்செயலாக ஏற்பட்ட விபத்துக்கள் என்பதை நன்கு உணர்ந்து கொள்ளல் அவசியம். இதனை தங்களின் குற்றங்களாகவோ, தாம் தூய்மை இழந்து விட்டதாகவோ மனதில் எண்ணிக் கொள்ளலாகாது. இவ்வாறான சம்பவங்கள் விபத்துக்களேயன்றி இழப்புகளல்ல. ● —புவி

# அன்புடன்......

வாசகர்களின் ஆக்கங்கள் கடிதங்கள் என்பன தொடர்ந்து சாளரத்திற்கு வந்து சேர்கின்றன.

இது குறித்து 'சாளரம்' மிகுந்த மகிழ்ச்சியுறுகின்றது.


ஆக்கங்களை அனுப்பும்போதும் கடிதங்களை எழுதும்போதும் உங்கள் பெயர் முகவரிகளை சரியாக குறிப்பிட மறந்து விடாதீர்கள்.

ஓவிய வாக்கியத்திற்கு கவிதை எழுதுகின்றவர்கள் மிகச்சுருக்கமான கவிதைகளாக எமக்கு எழுதியனுப்பினால் உதவியாக இருக்கும்.

சாளரம் வாசகர்களை அழைத்து எமது அலுவலகத்தில் சந்திக்கவுள்ளோம். அதற்கு வசதியாக உங்கள் முழுமையான முகவரிகளை உடனே எமக்கு தெரியப்படுத்துங்கள்.

சந்திக்கும் நாளை நாம் உங்களுக்கு அறிவிப்போம்.

# காலச் சக்கரம்




இங்கே காணப்படுவது ஒரு கலண்டர். இக்கலண்டரின் உதவியால் 1900 ஆண்டு முதல் 2000 ஆண்டுவரை உள்ள தேதி, கிழமைகளை அறிந்து கொள்ள முடியும்.

இப்படத்திலுள்ள மாதங்களும் திகதிகளும் குறிப்பிடப் பட்ட வட்டத்தை ஓர் அட்டையில் அமைத்துக் கொள்ளவும். உள்ளே காணப்படும் ஆண்டு, கிழமைகள் குறிப்பிட்ட வட்டத்தையும் இன்னோர் அட்டையில் அமைத்துக் கொள்ளவும்.

ஒரு படத்தின் நடுவேயுள்ள கட்டங்களில் ஆண்டுகள் குறிக்கப்பட்டுள்ளன. அந்தக் கடைசி கட்டங்களில் கடைசி செங்குத்து வரிசையில் கிழமைகளுக்குரிய எண் மட்டும் குறிக்கப்பட்டிருக்கின்றன. (1 திங்கள், 2 செவ்வாய், 3 புதன், 4 வியாழன், 5 வெள்ளி, 6 சனி, 7 ஞாயிறு) உங்களுக்கு 1931 ம் ஆண்டில் டிசெம்பர் மாதம் 11ம் நாள் என்ன கிழமை என்று அறிந்து கொள்ள வேண்டுமென்றால் படத்தின் கட்டங்களில் வரும் 31 எண் குறிக்கப்பட்டுள்ள இடைமட்ட வரிசையில் இறுதிக்கட்டத்தில் உள்ள எழுத்தைப் பாருங்கள். அது 4 என்று குறிக்கப்பட்டிருக்கும். 4 வியாழனைக்குறிக்கும். படத்திலுள்ள வெளிப்புறத்தில் கிழமைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன அல்லவா, அதில் வியாழக்கிழமையை மற்றப்படத்திலுள்ள டிசெம்பர் மாதம் என்று குறிக்கப்பட்டிருக்கும் கட்டத்துக்கு நேராகத் திருப்புங்கள். அந்தக்கட்டத்தில் 3, 10, 17, 24, 31 என்று எண்கள் உள்ளன. அவை டிசெம்பர் மாதத்தின் வியாழக்கிழமைகளைக் குறிக்கின்றன. டிசெம்பர் மாதம் 10 ஆம் நாள் வியாழன் என்றால் 11 ம் நாள் வெள்ளிக்கிழமை தானே, இதைப்போலவே வேறு ஒரு வருடத்தில் ஏதோவொரு மாதத்தில் குறிப்பிட்ட திகதி என்ன கிழமை என்று கண்டு பிடித்துப் பாருங்கள்!

லீப் வருடங்களில் சனவரி மாதத்தை பார்க்க 'சன, ஏப், யூலை' என்ற கட்டத்தையும், பிப்ரவரியை பார்க்கும்போது 'பிப், ஆக' என குறிக்கப்பட்டுள்ள கட்டத்தையும் பார்க்கவேண்டும். மற்றைய மாதங்களை, திகதிகளை மேலே குறிப்பிட்டதுபோல பார்த்தால் சரி.

# பலவன் பதில்கள்

கி. செல்மர் எமில்,
ஊர்காவற்றுறை

கே: வதந்தி பரப்புபவர்களைப் பற்றி உங்கள்கருத்து என்ன?

ப: நச்சுக்கிருமிகள்

கல்பனா கபிரியேல்பிள்ளை,
கன்னியர்மடம் ம. வி.
யாழ்ப்பாணம்

கே: தமிழீழம் கிடைத்த பின்பும் நமது நாட்டில் அகதிகள் இருப்பார்களா?

ப: இல்லை. சில சமயம் வேறு நாட்டு அகதிகளுக்கு தமிழீழம் தஞ்சமளிக்கலாம்.

கே: உண்மையான அறிவாளி எப்படி இருப்பான்?

ப: கடல் நீரினால் தாகந்தீர்க்க முனையாதவனாக.

க. கவி, மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி

கே: தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எதிராகப் பல கட்சிகள் பிரசாரம் செய்வது ஏன்?

ப: ஒருவரை ஒருநாள் ஏமாற்றலாம். பலரை பலநாட்கள் ஏமாற்றலாம். எல்லோரையும் எல்லாக்காலமும் ஏமாற்ற முடியாது.

சிறிஜாஜ்குமார் சுண்டிக்குளி
யாழ்ப்பாணம்

கே: தமிழீழத்தில் வாழும் தமிழ் மக்களின் மனநிலையில் குடிகொண்டுள்ள எண்ணக் கரு யாது?

ப: சுதந்திரம்

வே. கமலநாதன்
கோப்பாய்

கே: இனப்பிரச்சினையின் தீர்வுக்காக உருவாக்கப்பட்ட தெரிவுக்குழுவின் ஆலோசனைகள் இந்திய மாதிரியை ஒத்தவை என்று கூறுவது சரியா?

ப: இல்லை. ஒரு சிறு உதாரணம் இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் உள்ளன. ஒரே மொழி பேசுவோரைக் கொண்ட மாநிலமாக இருக்க வேண்டும் என்பதற்காக ஆந்திராவுடன் தெலுங்கானா இணைக்கப்பட்டது. அதே காரணத்துக்காகவே இந்தி மொழி பேசுவோரையும் பஞ்சாபி மொழி பேசுவோரையும் பெருமளவாகக் கொண்டிருந்த பஞ்சாப் மாநிலம் இந்திமொழி பேசுவோரைக் கொண்ட ஹரியானா எனவும் பஞ்சாபி மொழி பேசுவோரைக் கொண்ட பஞ்சாப் எனவும் பிரிக்கப்பட்டது. இங்கே இணைந்திருக்கும் தமிழ்மாகாணங்களான வடக்கையும் கிழக்கையும் தெரிவுக் குழு பிரிக்கின்றது. இப்படி பலவற்றைக் கூறலாம். □

யாழ்ப்பாணம் ... 1993


அரைக்கும் தேவைகளுக்காக
அதிக நேரம் காத்திருக்கத் தேவையில்லை.
நாம் உடனுக்குடனும், தரமாகவும்
உங்கள் எதிர்பார்ப்புக்கு அமைய
சேவைபுரிகிறோம்

மகாலிங்கம் அரைக்கும் ஆலை

(கிறைன்டிங் மில்)

பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தி.

யாழ் நகரில் வாகன வேலைகளை முழுமையாக
செய்து தருபவர்கள்

## நியூ யாழ் டீசல் என்ஜினியர்ஸ்

**திருத்த வேலைகள், 'டிங்கர்' வேலைகள்,
'பொடி' வேலைகள்**

தரமாகவும் உறுதியானதாகவும் செய்து
கொடுக்கப்படும்.

# நியூ யாழ் டீசல் என்ஜினியர்ஸ்

**176, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.**

கையெழுத்துப் பிரதிகளிலிருந்து ...

# வல்வையின் சகாப்தங்கள்

திரு. து. நவரத்தினம்

வல்வை பற்றி எனது சிறுவயதில் அறிந்த, கேள்விப்பட்ட சம்பவங்களையும், தற்காலத்தில் நான் காணும் சம்பவங்களையும் வரிசையாகக் 'கவிஞனில்' எழுதினால் பிற்காலத்தில் அதைப் படிப்பவர்கட்கும், தற்போது படிப்பவர்கட்கும் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்ற எண்ணத்தில் இதை எழுத ஆரம்பிக்கின்றேன்.

நெடியகாட்டுப் பிள்ளையார் கோவில் ஆரம்பமாகி அம்மன், சிவன் கோவில் வரை மேற்காக நீண்டும், தெற்கே தெணியம்பை வரை அகன்றும் முக்கோண அமைப்பில் உள்ள பகுதியே வல்வெட்டித்துறை என்ற பெயருடைய ஊரகக் கிராம விதானையாரின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்தது. இதன் எல்லையோரங்களில் பிள்ளையார் ஆலயங்களும் (நெடியகாடு, வேவில், புஸ்கரணி) கடலோரம், ஆதிகோவில் கப்பலுடையவர் கோவில், கொத்தியால்வைரவர், மீனாட்சி அம்மன் கோவில் ஆகியவையும், உட்பகுதியில் சடையாண்டி, உலகுடையார், வைகுண்டம் ஆகியவைகளும், கிழக்கே பொலிகண்டிக் கிராமத்தில் தில்லையன் மடத்து வைரவர் கோவில் ஆகியவையும் எனக்குத்தெரிய 1920 ஆம் ஆண்டுக்கு மேல் இவ்வூரில் அமைந்திருந்தன.


சிதம்பராக்கல்லூரி ஆங்கிலப் பாடசாலையாகவும், சிவகுரு, அரியகுட்டி (அமெரிக்க மிஸன்) கத்தோலிக்கப் பாடசாலை ஆரம்ப தமிழ்ப் பாடசாலைகளாகவும் இருந்தன. இவைகளுடன், ரேவு, (கப்பல்கள் வந்து ஏற்றி இறக்கும் துறைமுகம்) தபாற் கந்தோர், மீன்கடை, மரக்கறிக்கடை, ஒரு சவுளிக்கடை, மூன்று மளிகைக்கடை பத்து வரை குட்டிக்கடைகளும் இருந்தன. இவ்வூரவர்களின் பிரதான தொழில் கப்பல் கட்டுதல். வெளிநாடுகளுக்குக் (இந்தியா, பர்மா) கப்பல் ஓட்டிச் சென்று பொருட்களை வியாபாரம் செய்தனர்.

மிகக் குறைந்த தொகையினர், மீன்பிடித் தொழிலும், இரண்டு மூன்று குடும்பத்தினர் விவசாயம் செய்பவர்களாகவும், கப்பல் சம்பந்தமான தொழிலில் பலவகைக் கூலி வேலை செய்பவர்களாகவும் இருந்தனர். சிறிய தொகையினர் அரசஊழியர்களாகவும் இருந்தனர்.

அக்காலத்தில் முதலாளி என்று அழைக்கப்பட்டவர்கள் பத்துக்குட்பட்டவர்களும்; தண்டயல்கள் என்ற நிலையில் இரு பதுக்குட்பட்டவர்களும் ஊரின் பிரபலஸ்தர்களாகவும் ஓரளவு வளமான வாழ்வும் செல்வாக்குள்ளவர்களாகவும் இருந்தார்கள். மிகுதியானோர் நடுத்தர வாழ்வு உள்ளவர்களாகவும், மிகக் கஸ்டமான ஏழ்மையினால் வாடும் நிலையிலும் ஒரு பகுதியினர் இருந்தனர். குல உயர்வு தாழ்வு அதிகம் பார்ப்பவர்களாகவும், சமய ஆசாரம் கோயில் வழிபாடுகள் விரத நியமங்கள் இவைகளில் அதிகம் அக்கறை உள்ளவர்களாகவும், இருந்தார்கள். எனக்குப் பத்து வயது வரையில் (1930 ஆம் ஆண்டு) நான் தெரிந்து கொண்ட வல்வை மக்களின் ஊர் அமைப்பின் தோற்றம் இதுவே. எனது உத்தேசம்; இவ்வூரின் சனத்தொகை அப்போது ஒரு ஆயிரம் ஆயிரத்தி ஐநூறு அளவில் இருந்திருக்கலாம். வீடுகளில் 25 வீதம் ஓட்டு வீடுகளும், மிகுதி ஓலைக்குடிசை வீடுகளுமாகவே இருந்தன. அப்போது தார் ரோடு இருக்கவில்லை. மின்சார வெளிச்சம் இல்லை. கடலில் சுமார் 30 உருவுகள் எந்த நாளும் நாங்கள் எண்ணிப் பார்த்து சந்தோஷமடையக் கூடியதாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும். வாடைக்காற்றுக் காலங்களில் இதன் தொகை குறைந்து ஏதும் இல்லாமலும் இருக்கும். கப்பலில் பல தோற்றம், 4 பாய் மரம், 3 பாய் மரம், 2 பாய் மரம் என்ற தரவரிசையானவையும், வாடா, வத்தை, படகு என அமைப்பு மாறுதல் உள்ளவைகளாகவும் தென்படும். காலை மாலை நேரங்களில் இக்கப்பல்களுக்கு (காவான்) இரவுக் காவல் வேலைக்குக் கஸ்டம்ஸில் இருந்து செல்வதற்கும் வருவதற்கும், சிறிய மச்சுவாய் என்ற பெயரில் செல்பவைகளைப் பார்ப்பதும் அவைகளை எண்ணுவதும் என்போன்றவர்கட்கு மிகச்சிறந்த பொழுது போக்காகவும், கண்கொள்ளாக் காட்சியாகவும் இருக்கும். இவைகளை இன்றுள்ளவர்கள் அறியமுடியாது, கற்பனையிலும் காணமுடியாது போனது துரதிஸ்டமே. □

'கவிஞன்' ஏப்ரல் 1987

(கணபதி படிப்பகம், நெடியகாடு வல்வெட்டித்துறை)



## என்ன இது ?

அடுத்த ஒலிம்பிக் 1996ம் ஆண்டு அட்லாண்டா நகரில் நடைபெறவுள்ளது. அதில் பயன்படுத்தவிருக்கும் சின்னத்தின் தோற்றம்தான் இது. இதன் பெயர் 'வாடிஸிட்' (WHATIZIT) 'WHAT IS IT?' என்பதன் சுருக்கமே WHATIZIT !

# நான் எழுதுவது கடிதம் அல்ல

| | | | |
|---|---|---|---|
| கவிழ்கிறேன் | நெஞ்சம் | காரணம் | என்னவெனில் |
| காலமோ | நீண்டுவிட்டது | கடிதம் | வரைவதற்கு |
| கிழிக்கவில்லை | இங்கொன்றும் | ஓய்வொழிச்சல் | இல்லாமல் |
| கீற (எழுத) | முடியாததிற்கு | மன்னிக்க | வேண்டுகிறேன் |
| குரல்களோ | சிங்களம் | இடறினால் | ஆங்கிலம் |
| கூசாமல் | சொல்லுகிறேன் | தமிழெனக்கு | உதவவில்லை |
| கெட்டொழிந்து | போகாமல் | எந்நிலையிலும் | உறுதிபெற |
| கேவலம் | சிங்களம் | அவசியம் | நீரறிவீர்! |
| கைமேல் | பொறுப்பாக | வேலை | தந்துள்ளனர் |
| கொழும்புத் | துறைமுகத்தின் | கணக்காளர் | பகுதியில் |
| கோபிக்க | வேண்டாம் | தாமதித்த | கடிதம் கண்டு |
| கௌ | ஆர் | யூ | நௌ? |

— யோகராசா

(சிதம்பரா மாணவனாகிய இவர் குறிப்பிட்ட வேலைக்கு நியமனம் பெற்று கொழும்பு பட்டினம் சென்ற போது தன் நண்பர்களுக்கு எழுதிய முதல்கடிதத்தில் காணப்படும் கவிதை)

அலை ஒளி 27- 4- 73
(வல்வை சனசமூக சேவா நிலையம்)

# மின் கணினி

இன்று எம் வாழ்வில் கணினிகள் பெரிய பங்கை வகிக்கின்றன. 1890 ஆம் ஆண்டளவில் கணினியின் அடிப்படை விதிகளை கண்டுபிடித்த இங்கிலாந்தை சேர்ந்த சார்லசு பாவேசு என்பவரே கணினியின் தந்தையாக போற்றப்படுகின்றார். பொதுவாக கணினிகள் மூன்றுவகைப் படும். பெருகுக்கணினி (Main Frame Computer) மினி கணினி (Mini Computer) மைக்ரோ கணினி (Micro Computer).

சுப்பர் கணினி பெருகுக் கணினி வகையை சேர்ந்தது. இது விநாடிக்கு இரண்டு கோடி சிக்கல்களை தீர்த்து வைக்கக்கூடியது.

கணினியின் ஆரம்ப கல்வி மொழி 'பேசிக்' 'Basic'ஆகும். (Beginners of all purpose in symbolic instruction code) கணினியின் இதயம் அதன் 'சிபியு' ஆகும். 'CPU' (The central processing unit) இன்னுமொரு முக்கிய பகுதி அதன் நினைவு ஆற்றலான 'எம்யு' ஆகும். ''MU'' (Memory unit)

நாம் பயன்படுத்தும் கணினி நான்காம் தலைமுறையைச் சேர்ந்தது. ஐந்தாம் தலைமுறை கணினி புது மொழி கொண்டு இயங்கும். அதனை 'புரோலொக்' என அழைக்கின்றனர். ''Prolog'' (Programming in Logic) இம்மொழி அலன், இரசல் என்பவர்களால் 1972 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது.

தற்கால கணினிகளில் 2000 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட தமிழ்மொழியை இலகுவாக பயன்படுத்தக்கூடியதாக இருப்பது பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது.

தற்போது இன்புற், அவுட்புட் (input, output) சொவ்ற்வெயர் (Soft ware) காட்வேயர் (Hardware) போன்ற சொற்களுக்கு பதிலாக அகம், புறம், மென்பொருள், வன்பொருள் என பழந்தமிழ் சொற்களை புதிய கருத்தோடு பயன்படுத்தலாம் என்றும் கூறுகின்றனர்.

# மார்ச் 21

மார்ச் 21 சிறிலங்கா காவல் துறையின் நினைவு நாளாகும். 1864 ம்ஆண்டு மார்ச் திங்கள் 21ம் நாள் அன்று முதன் முறையாக காவல் துறையின் நிரந்தர உத்தியோகத்தர் கொல்லப்பட்ட நாளாகும். ஒரு குற்றவாளியை பிடிக்கச் சென்ற கான்ஸ்டபிள் சபான் குற்றவாளியான சரதியலின் தோழன் மரிக்காரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அன்றிலிருந்து 1993 சனவரி திங்கள் வரை 1467 காவல் துறையினர் கொல்லப்பட்டுள்ளனர். 20 . 11 . 84 சாவகச்சேரி காவல் துறை நிலையம் தாக்கப்பட்ட போது கொல்லப்பட்ட காவல் துறை பொறுப்பு மேலாளர் ஆர் . எம். ஏ. இராமநாயக்க ஆவார்.

## எங்கும் ஆண் மேலாதிக்கம்

—பாலகுமாரன்

எங்கும் ஒரே கதைதான், மேற்காயிருந்தால் என்ன? கிழக்காக இருந்தால் என்ன? பெண்களைக் கீழ்நிலைப்படுத்தல் என்பது பொதுவானது. குறிப்பாக மெத்த வளர்ந்த மேற்கிலோ பலருக்கு பெண்நிலை வாதம், பெண்ணுரிமை என்றாலே ஒவ்வாமை, பெண்ணுரிமை இயக்கங்கள் விரைவிலேயே தமது முடிவை அடைந்துவிடும் என எதிர்வு கூறல் இவர்கட்கு விருப்பமான ஒரு செய்தி ஆனால் இவர்கள் எதிர்பார்ப்பதற்கு மாறாக இன்று பெண்ணுரிமை இயக்கங்கள் புதியதொரு திசையில் மிக முனைப்பாக செயலாற்றி வருகின்றன.

அறிவியல் ரீதியாக கடந்தகால செயற்பாடுகட்கு ஊடாக குறிப்பாக பெண்களுக்கான பத்தாண்டு (.975-.985) காலகட்ட பட்டறிவின் விளைவாக பெண்ணுரிமை அமைப்புக்கள் சில உண்மைகளை மிகத்தெளிவாக உணர்ந்து விட்டன. எங்கும் ஆண் மேலாதிக்கம் நிலவும் இவ் உலகிலே இதுவரைகாலமும் பெண்ணிய அமைபபுக்கள் எடுத்த முயற்சிகள் முழுமை பெறமுடியவில்லை அரசியல், சட்ட, ஏன் சமயத் துறையை எடுத்தால்கூட எங்கும் பெண்ணுரிமை என்பது ஒரு முக்கியவிடயமாக மதிக்கப்படுவதே இல்லை. மிகக் குறுகிய வட்டத்துக்குள்ளே பெண்ணுரிமைகளை அடக்கிவிட ஐ நா உட்பட ஆணாதிக்க உலகம் முயல்கின்றது. அத்தோடு பெண்கள் முகங்கொடுக்கும் வன்முறைகள், அடக்குமுறைகள், பாரபட்சம் காட்டப்படல் போன்ற கொடுமைகள் உலகெங்கும் அதன் அளவிலும், தன்மையிலும், வேறுபட்டாலும் அடிப்படையில் ஒன்றே என்பதையும் இவர்கள் இன்று மிகத் தெளிவாக உணர்ந்துவிட்டனர்.

ஆசியாவிலே பெண்ணுரிமை அமைப்புக்கள் பெண்கள் விலைபேசப்படும் அடிமை நிலைக்கு எதிராகவும் ஆபிரிக்காவிலோ பழமைவாத தேசவழமைக் கோட்பாடுகள் பூட்டிய விலங்குகளிலிருந்து பெண்களை மீட்கவும் முன்னுரிமை வழங்க நேரிடுகிறது. அது போலவே மேற்கில் பெண்கட்கு எதிரான உள்ளக வன்முறைகட்கு எதிராக போராட வேண்டும். இவ்வாறு பலவகை முன்னுரிமைகள் இருந்தாலும் அடிப்படையிலே பெண்கள் கீழ்நிலைப்படுத்தல் என்பதே ஒரு சர்வதேச பரிமாணமாக உள்ளது. பெண்ணுரிமைகள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டுவரும் 'றொபேக்கா குக்' என்ற சர்வதேச சட்டத்துறைப் பேராசிரியையின் முடிவு இது. எனவே தான் இன்று பெண்ணுரிமை அமைப்புக்கள் சர்வதேச அரங்கின் சட்டரீதியான மனித உரிமைகளின் மையமாக அங்கீகரிக்கப்பட்ட உலக அறங்களாக பெண்ணுரிமைகளை ஆக்க முனைப்பாக முயலுகின்றனர்.

இன்றுள்ள பெருத்த அவலம் என்னவென்றால் மனித உரிமைகளின் காப்பிடமாகக் கருதப்படும் ஐ. நாவிலே நிலவும் மோசமான ஆண்மேலாதிக்கம் தான். ஐ. நாவின் முழுக்கவனமும் ஆணுலகம் முகம் கொடுக்கும் அரசியல், குடியியல் சார் மனித உரிமை மீறல்கள் குறித்தே செலுத்தப்படுவதாக பெண்ணுரிமை அமைப்புக்கள் குறைப்படுகின்றன. பெண்கட்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகள் குறித்தோ அல்லது அவ்வவ்நாட்டு சமய ரீதியான புறக்கணிப்பு விதிகள், தேசவழமையின் அநீதியான பக்கங்கள் குறித்தோ ஐ. நா போதிய கவனம் செலுத்தவில்லை. ஏனென்றால் ஐ நா ஆணுலகத்தால் தாபிக்கப்பட்டு அவர்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றது என்கிறார் றொபெக்கா. ஐ. நாவின் பல மனிதஉரிமைப் பட்டயங்கள், காப்பு, விதிகள், கண்காணிப்பு ஏற்பாடுகளயும் பெண்ணுரிமைகளையும் அடக்கியுள்ளதாக கூறப்படுவது பொய்மை என்கிறார் இப் பேராசிரியை. ஐ. நாவின் சித்திரவதைக் கெதிரான கண்காணிப்புக் குழு பெண்கட்கு எதிரான வதைகள் குறித்து எவ்வித நடவடிக்கை எடுக்காமலிருப்பதையும், பெண்கள் படும் வதைகள் இவர்கள் கூறும் சித்திரவதைக்கான வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்படாமல் இருப்பதையும் இங்கு குறிப்பிடமுடியும்.

இதுபோலவே 1946ம் ஆண்டு தாபிக்கப்பட்ட ஐ. நாவின் மனிதஉரிமை ஆணைக்குழுவும் முதல் இதன் துணை அமைப்பாகவிருந்து பின் முழு ஆணைக்குழுவாக மாற்றப்பட்ட பெண்கள் நிலை குறித்தான ஆணைக்குழுவும் (commission on the status of women) தனித்தனி செயற்பாடுகள் வேலைத்திட்டங்களை - கொண்டிருந்தாலும் பெண்ணுரிமைகளை

### ஏழாயிரம் பாடசாலைகள் வளர்ச்சி?

இலங்கைத் தீவில் 94 சதவீத பிள்ளைகள் ஆரம்பக் கல்வியில் பங்கெடுக்கின்றனர். 92 சதவீதத்தினர் ஆரம்பக் கல்வியை முற்றாகப் பெறுகின்றனர். ஆசிய நாடுகள் யப்பானுக்கு அடுத்த படியாக எழுத்தறிவு வீதத்தை (87%) இலங்கைத் தீவு வகிக்கின்றது. இங்கு 10,300 பாடசாலைகளில் 189,000 ஆசிரியர்கள் கல்வியூட்டுகின்றனர்.

இவ்வாண்டு 300 மத்திய மகா வித்தியாலயங்களை நாடு முழுவதும் சிறிலங்கா அரசு நிறுவ முயல்கின்றது உலக வங்கியின் உதவியுடன் இவ்வாண்டில் 22 கோடி 6 இலட்சம் ரூபா செலவில் சுமார் ஏழாயிரம் 2 ஆம் 3 ஆம் தரப் பாடசாலைகள் வளர்ச்சியடைச் செய்யப்படவுள்ளன. இவற்றில் பணிபுரியும் அதிபர்களுக்கு முகாமைத்துவப் பயிற்சியும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மனித உரிமைகளாக்கும் விடயத்தில் போதிய பங்காற்ற முடியவில்லை. ஏனென்றால் இவை இரண்டிற்குமிடையே போதிய தொடர்போ, ஒத்துழைப்போ இல்லாமையால் இந்நிலை ஏற்பட்டதாக பெண்கள் அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. இதற்கும் ஆண் மேலாதிக்கமே காரணம்.

எனவேதான் தனது பொதுமைப்பட்ட பெண்ணுரிமை விவகாரத்தை சர்வதேச மயப்படுத்த இவை முயல்கின்றன. முதற்படியாக இவ்வருடம் வியன்னாவில் நடைபெறவிருக்கும் சர்வதேச மனித உரிமை மாநாட்டிலும் அதைத்தொடர்ந்து 1994ல் நடைபெறவிருக்கும் சனத்தொகையும், அபிவிருத்தியும் தொடர்பான சர்வதேச மாநாட்டிலும் நிகழ்ச்சி நிரல்களில் பெண்ணுரிமையை மனித உரிமையாக்கும் விடயத்தை சேர்க்க முயல்கின்றனர். இதைத்தொடர்ந்து இவர்கள் அடுத்தபடியாக சீனாவில் 1995ல் நடைபெறவிருக்கும் பெண்கட்கான நான்காவது சர்வதேச மாநாட்டில் இது குறித்து ஒரு தெளிவான முடிவைஎடுக்க முடியும் எனநம்புகின்றனர்.

பெண்கள் தமக்காக தாமே செய்ய முற்பட்டிருக்கும் இப்பணி வெற்றியடைய வேண்டும் எனினும் சட்டரீதியாக மட்டுமே பெண்கள் பெறும் சமத்துவம் ஆணுலகத்தால் அவர்கள் மனோவுலகத்தாலும் வழங்கப்பட வேண்டும். எனினும், அதற்கு முதற்படியாக றொபேக்கா குக் கூறியதுபோல் மனித உரிமைகள் என்பது சர்வதேச சட்ட அமைப்பின் தலையாய துறையாக விளங்கப்பட வேண்டுமானால் மானிட சமுதாயத்தின் அரைப்பங்கின் உரிமைகள் பேணப்பட வேண்டும். தீவிரமாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை மறுபாதி ஆணுலகம் உணரவேண்டும்.

## வெங்காய மருமம்

இன்றைய உலகிலே எந்த நாட்டிலாயினும் சரி உணவுக்கு சுவையூட்ட, மணமூட்ட வெங்காயம், உள்ளி போன்றவை பயன்படுத்தப்படுகின்றன என்பது தெரிந்த விடயம். ஆனால் தெரியாத விடயம், இத்தாவரங்கட்கு (allium தாவரக் குடும்பம்) உரித்தான விசேடத் தன்மையான காரத்தன்மை மிகுந்த சுவை எவ்வாறு கிடைக்கிறது என்பதுதான். நீண்டகாலமாக உணவுப்பொருள் ஆய்வோடு தொடர்புடைய வேதியலாளரை அலைக்கழித்த வினா இது. ஏறத்தாழ 100 சேர்வைப் பொருட்கள் கலந்து இம்மணம், குணம் உருவாகியிருப்பதாக இவர்கள் இற்றைவரை கருதினர். அத்தோடு இத்தாவரங்கட்கு உரித்தான சுவையை தரத்தக்க வகைகளாய் தயாரிக்கப்பட்ட செயற்கை மணமூட்டிகள் இயற்கைத் தாவரத்தின் இயல்புக்குக் கிட்ட நெருங்கவே முடியவில்லை.

இப்போது அமெரிக்க விஞ்ஞானியான எரிக் போல்ஸ்டர் (Eric bolster) வெங்காய மருமத்தை கண்டறிந்துவிட்டதாகக் கூறுகிறார். குறிப்பாக 'சல்பர்' (Sulphur) வேதியல் பொருளே அதிகம் இருப்பதாகவும் அதனாலேயே காரம், கண்ணீர் வரட்பண்ணும் எரிச்சல் போன்றவை வெங்காயத்திலிருப்பதாக இவர் கூறுகிறார். இவ்வாய்வு முக்கியமானதாக கருதப்படுகிறது. ஏனென்றால் இதனுதவியோடு உள்ளியின் மருத்துவ மகிமைபற்றி (இருதய நோய்க்குத் தடுப்பாக பயன்படும் தன்மை) விரிவாக ஆராய முடியும் என கருதப்படுகிறது.

## ஓவியம் வாக்கியம்

மிஸ்டர் கரேஜ்!



ஒக்லகாமா என்ற மாநிலத்தின் ஒரு அமெரிக்கர் தான் இவர். பெயர் - ரோஜர் கார்ட்டர். விபத்தொன்றினால் தனது இருகால்களையும் இழந்துள்ள இவர் அபார துணிச்சலும், தன்னம்பிக்கையும் மிக்கவர். இவர் இரு செயற்கைகால்களைப் பொருத்திக் கொண்டு 'கொல்ப்' (Golf) விளையாடுகிறார். பலவித உடற்பயிற்சிகளை செய்கிறார். 100மீட்டர் ஓட்டப் பந்தயங்களில் கலந்து கொள்கிறார். சிலருக்கு கால்பந்தாட்டப் பயிற்சியும் கொடுக்கிறார். 'மிஸ்ரர் கரேஜ்' (திரு. தைரியசாலி) என்று இவரை எல்லோரும் அழைக்கிறார்கள். அத்துடன் இவருக்கு எல்லா உதவிகளையும் செய்கிறார்கள்.

சாளரம் வாசகர்கள் இவருக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

ஊனமற்ற இவரின் உள்ளத்தை மெச்சி ஓர் கவிதை எழுதுங்களேன்.

# தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழ் 'வீடியோ' திரைப்படங்களும்

விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற ஆரம்ப கால கட்டங்களில், அதாவது 1986 - 1987 காலப்பகுதிகள் வரை போராட்ட வடிவங்களும், விளக்கங்களும், மக்களுடே செலுத்தப் படுவதற்கும், மக்களை போராட்டத்துடன் இணைத்துக் கொள்வதற்கும், கருத்தரங்குகள், வீதியோர நாடகங்கள் (தெருக்கூத்து) நாட்கங்கள் போன்ற ஊடகங்கள் பயன் படுத்தப்பட்டன. காலப் போக்கில் மக்கள் தென்னிந்திய வீடியோ படங்கள்மீது அதிக நாட்டம் கொள்ள ஆரம்பித்தனர். இந்த நிலையில் எமது போராட்ட சிந்தனைகளை மக்கள் மனதில் பதிய வைப்பதற்கு நாமும் அவ்வகையான ஒரு ஊடகத்தை அதாவது வீடியோ படம் என்ற ஊடகத்தை பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இதன் ஆரம்பகட்டமாக அரியாலைப் பிரதேசத்தில் முதன்முதலாக ஒரு போராட்ட சிந்தனை யூட்டமுடைய ஒரு திரைப்படம் தயாரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்நகரில் கோட்டை- நாவற்குழி - பருத்தித்துறை - தொண்டமானாறு - பலாலி என சூழவர ராணுவ முகாம்கள் இருந்த வேளையில் அரியாலையை சேர்ந்த திரு. என். கேசவராஜா என்பவர் இந்த வேலையை ஆரம்பித்தார். அந்த நேரத்தில் கலை- கலாச்சார அவையோ, கலை - பண்பாட்டுக்கழகமோ ஆரம்பிக்கப் படவில்லை. இதனால் 'தமிழர் கலாச்சார வட்டம்' என்ற பெயரில் ஒரு கலை அமைப்பை உருவாக்கி வீடியோ படங்கள் தாரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வகையில் முதலாவது திரைப்படம் விடுதலைப் புலிகளின் தாரகமந்திரமான "தாயகமே தாகம்" என்ற பெயரில் தமிழீழத்தில் போராட்டத்தை மையமாகக் கொண்டு வெளியிடப்பட்டது. 1986ம் ஆண்டு யாழ் வைத்தீஸ்வரா சந்தியில் அமைந்திருந்த "எம்பயர் ஸ்கோப்" என்ற மினி திரை அரங்கில் 'தாயகமே தாகம்' என்ற முதல் வீடியோ திரைப்படம் வெளியிடப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. திரு. செம்பியன் செல்வன் அவர்கள் அப்படத்தின் மதிப்பீட்டு உரையை நிகழ்த்தினார். தொடர்ந்து யாழ் நகரின் பல மினி திரை அரங்குகளிலும் நான்கு அடி அகலத்திரையில் இப்படம் அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடியது. அரியாலையைச் சேர்ந்த பல முன்னணிக் கலைஞர்கள் நடித்திருந்தனர்.

இது போல 1987ல் தமிழர் கலாச்சார வட்டத்தினரின் 2வது வீடியோ படமான மரணம் வாழ்வின் முடிவல்ல என்ற திரைப்படம் வெளியிடப்பட்டது. இது 03 - 05 - 1987 அன்று ராஜா மினி திரை அரங்கில் வெளியிடப்பட்டது. வெளியீட்டு விழாவின்போது தமிழர் கலாச்சார வட்ட செயலாளர் டானியல் - சவுந்திரன் வரவேற்புரையையும், ஆசியுரையை கம்பன் கழக அமைப்பாளர், திரு: இ. ஜெயராஜ் அவர்களும், சிறப்புரைகளை, அன்றைய யாழ் மாநகர சபை ஆணையாளர் சி. வீ கே. சிவஞானம் அவர்களும் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களும் நிகழ்த்தினார்கள். தாயகமே தாகம் படத்தின் மூலம் சொந்த நாட்டிலேயே அகதிகளாகிவரும் திருமலை மக்களின் துயரங்களையும், துன்பங்களையும் எடுத்துக் காட்டிய தமிழர் கலாச்சார வட்டத்தினர், இரண்டாவது படமான 'மரணம் வாழ்வின் முடிவல்ல' படம் மூலம், தமிழ் - முஸ்லீம் ஒற்றுமை பற்றியும் போராட்ட நிகழ்வுகள் பற்றியும், ராணுவ அடக்கு முறைகள் பற்றியும் தெளிவாக எடுத்துக் காட்டி இருந்தனர். இத்தகைய திரைப்படங்கள் இரண்டும் போராட்ட காலத்தில் மக்களுக்கு கிடைத்த பெரு வெற்றியாகும். "மரணம் வாழ்வின் முடிவல்ல" என்ற திரைப்படத்தை,

நமது மண்ணின் அவலங்களை, நமது மக்களின் அல்லல்களை ஆற்றல் மிகு கரத்தில் ஆயுதங்கள் ஏந்தி வந்து, மாற்றத்தை உருவாக்கும் தியாகச் செல்வங்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளார்கள்.

மேலும், இது எமது மண்ணின் கதை... மக்களின் கதை...

விடுதலைப் போரை முன்னெடுக்கும் போராளிகளின் பின்னே அணிதிரளும் சுதந்திர தாகம் கொண்டோரின் கதை என வர்ணிக்கப்பட்டுள்ளது தாயகமே தாகம்.

வெற்றி நடை போட்டு ஓடிய படமாகையால், மரணம் வாழ்வின் முடிவல்ல படமும் மிகத் தரமான தாகவே இருக்கும் என்ற எதிர் பார்ப்பு எல்லோரிடமும் இருந்தது. ஈழமுரசு வாரமலர் ஒன்றில் கலைக் கூடம் என்ற பகுதியில் மரணம் வாழ்வின் முடிவல்ல திரைப்படம் பற்றி பின்வருமாறு விமர்சிக்கப் பட்டிருந்தது.

"ஏற்கனவே எமது விடுதலைப் போராட்ட நிகழ்வுகளை பின்னணியாகக் கொண்டு, 'தாயகமே தாகம்' என்ற வீடியோ திரைப் படம் ஒன்றினை தயாரித்து வெளியிட்டுள்ள தமிழர் கலாச்சார வட்டத்தினர் மரணம் வாழ்வின் முடிவல்ல என்னும் மற்றுமோர் படத்தினை தயாரித்துள்ளனர். போதை வஸ்து பாவனையால் ஏற்படும் விபரீத விளைவுகள், தமிழ் - முஸ்லீம் ஒற்றுமை, இன விடுதலை போராட்ட நிகழ்வுகள், ராணுவ, ஊர் காவல் படையினரின் அட்ட

காசங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டகதை என்றும் இம்மாத இறுதியில் இப்படம் உள்ளூர் திரையரங்குகளில் திரையிடப்படவுள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் மரணம் வாழ்வின் முடிவல்ல என்ற படத்தினை பார்வையிட்ட எமது தேசியத் தலைவர் அவர்கள், அதனைப் பாராட்டி சுமார் நான்காயிரம் ரூபா பணப் பரிசினை தமிழர் கலாச்சார வட்ட தலைவர் திரு. கேசவராஜா அவர்களிடம் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய செயல் மூலம் விடுதலைப் போரில் கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

இதனைத்தொடர்ந்து, போராட்டகாலத்தில் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக மக்களை ஊக்குவிக்க நல் உதயம் என்ற பெயரில் அரியாலையில் சந்திரகுமார் என்பவர் உற்பத்தி சம்பந்தமாக ஒரு வீடியோ திரைப்படத்தையும், அதன் பின் நிதர்சனம் பிரிவினர் இனி ஒரு விதி என்ற வீடியோ திரைப்படத்தினையும் பின்னர் கலை பண்பாட்டுக்கழக முல்லை மாவட்டப் பிரிவினர் தமிழோசை என்ற வீடியோ திரைப்படத்தையும் தயாரித்து வெளியிட்டுள்ளனர். இதைவிட இன்னும் பல திரைப்படங்கள் ஆங்காங்கே தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற தகவல்களும் கிடைத்திருக்கின்றன.

இந்தக் கட்டுரை வாயிலாக, வீடியோ திரைப்பட ரசிகர்கள்- தயாரிப்பாளர்கள் - கலைஞர்கள் சார்பில் நாம் எதிர்பார்ப்பது என்னவெனில், தமிழீழமெங்கும் அடங்கியிருக்கும் இத் திரைப்படத்துறைத் திறமைகள் அனைத்தும், எமது போராட்டத்தை கொச்சைப்படுத்தாத - நசுக்காத- பின்னடிக்காத - பண்பாட்டுச் சீர்கேடு அற்ற வகையில் வீடியோ திரைப்படமாக வெளிவரவேண்டும். அவற்றை கலை பண்பாட்டுக்கழகமானது ஆய்வு செய்து சரி பார்த்து, அங்கிகரித்து, தயாரிப்பாளர்களிடமிருந்து அதனை நியாயமான விலைக்குப் பெற்று, திரையரங்குகள் மூலம், ஒழுங்கான முறையில் மக்கள் பார்த்து ரசிக்க வகை செய்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

—பாபு அரியாலை

# இலங்கையின் மறு பெயர்கள்

(1) இயக்க திவு — இயக்க மன்னன் குபேரன் ஆட்சி செய்தமையால்.

(2) நாகத்திவு — நாகர்கள் ஆண்டதால்.

(3) இலங்கை — இலட்சம் தீவுகள் இருந்ததால்.

(4) இரத்தினதுவீபம் — இரத்தினக் கற்கள் அதிகம் இருப்பதால்.

(5) ஈழம் — 'எலு' வென்ற திராவிட மொழியைப் பேசிய மக்கள் வசித்ததால்.

(6) மும்முடிச் சோழ மண்டலம் — சோழர்கள்பெயர் சூட்டினர்.

(7) சிங்களத்துவீபம் — சிங்களவர்கள் வசிப்பதால்.

(8) தாபிரபன (Tapro bane-Greek) (Tamra Paranai Tamil) (Tamra pani - Pali) — ராவணன் தீவு - உரோம, கிரேக்க ஆசிரியர்கள் இவ்வாறுஅழைத்தனர்.

(9) பாலாசி முண்டு (தமிழ்ச் சொல்) (Palaes Moundu) — கிரேக்க, உரோமர் அழைத்தனர்.

(10) சாலிக (Salika) — தாபிரபன எனப்படும் இப்பெயர் சாலிக என அழைக்கப்பட்டது. (தொலமி குறிப்பிட்டுள்ளார்.)

(11) சலாபதீபம் (Salaba - Dipa) — முத்துக்குளிப்பதால்.

(12) செருண்டிப் (Serendip) — அராபிய ஆசிரியர்கள் இவ்வாறு அழைத்தனர். இந்த செரண்டிப்பேமருவி Siren, Zeilan, Ceylon என்று வந்துள்ளது.

ஆதாரம் — முதலியார் குலசபாநாதன் கோப்புகள்.

# துடுப்பெடுத்தாட்டம்



கவாசுகருடன் அலென்போடர்

# அலென்போடர்

37 அகவை நிரம்பிய ஆசுதிரேலிய துடுப்பெடுத் தாட்ட அணியின் தலைவர் அலென் போடர் 26.02.93 அன்று நியூசிலாந்தில் கிறித்து சேர்ச்சில் நடந்த துடுப்பெடுத்தாட்டப் போட்டியில் இந்திய வீரர் சுனில் கவாசுகர் பெற்ற 10,122 ஓட்டங்களிலும் கூடு தலாக ஓட்டங்களை ரெஸ்ட் போட்டிகளில் பெற்று புதிய உலக சாதனையை ஏற்படுத்தினார்.

சுனில் கவாசுகர் 125 ரெஸ்ட் போட்டிகளில் 214 தரம் ஆடி 10,122 ஓட்டங்களை பெற்றார். அலென் போடர் 139 ரெஸ்ட் போட்டிகளில் 240 தரம் ஆடி 10,161 ஓட்டங்களை பெற்றார். அலென் போடரின் சாதனைகள் பெரும் பட்டியலாக தொடர்கின்றது. கூடிய ரெஸ்ட் ஆட்டங்களை ஆடியவர் இவரே (139) தொடர்ச்சியாக கூடிய ரெஸ்ட் ஆட்டங்களை ஆடிய வரும் இவரே (139). (மெல்போனில் 78-79ம் ஆண் டில் இருந்து கிறித்து சேர்ச்சில் 92-93ம் ஆண்டுவரை.)

கூடிய தடவை ஆடியவர்; (240) கூடிய ஓட்டங் களைப் பெற்றவர் (10, 161) 50 க்கு மேல் கூடிய தடவைகள் அடித்தவர்; (84) கூடுதலாக ரெஸ்ட் விளையாட்டில் தலைவராக தொடர்ச்சியாக ஆடிய வர் (76) கூடிய 'கச்'சுகளை பிடித்தவர் (138) என இவரின் பட்டியல் நீளுகிறது.

இவர் இக்காலத்தில் 25 நூறுகளை அடித்துள்ளார். அதேவேளை சுனில்கவாசுகர் 34 நூறுகளை அடித்துள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அலென் போடர் ஒவ்வொரு ஆட்டத்திலும் 51.31 ஓட்டங்களையும் சுனில் கவாசுகர் 51.12 ஓட்டங்களையும் சராசரியாகப் பெற்றுள்ளனர். அதேவேளை முன்னாள் ஆசுதிரேலிய துடுப்பெடுத்தாட்ட வீரரான டொனால்ட் பிராட்மன் என்பவர் தனது இறுதி ஆட்டத்தில் 0 அடித்ததற்கு பதிலாக ஒரு நாலு அடித்திருந்தால் சராசரியாக ஒவ் வொரு ஆட்டத்திலும் நூறு அடித்தவர் என்ற பெரு மையை பெற்றிருப்பார். (பிராட்மன் 54 ரெஸ்ட் போட்டிகளில் 6996 ஓட்டங்களை பெற்றார். சராசரி ஒவ்வொரு ஆட்டத்திற்கும் 99.94 ஓட்டங்கள்)

## அலென்போடரின் ரெஸ்ட் விபரம்

| | தலைவர் | ரெஸ்ட் | ஆட்டம் | ஓட்டங்கள் | கூடிய ஓட்டம் | நூறு | ஐம்பது | O | 'கச்' | சராசரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எதிர் இங். | 23 | 41 | 73 | 3115 | 196 | 7 | 20 | 3 | 49 | 56.63 |
| எதிர். மே. இந். | 18 | 31 | 59 | 2052 | 126 | 3 | 14 | 4 | 19 | 39.46 |
| எதிர் பாக். | 6 | 22 | 36 | 1666 | 153 | 6 | 8 | — | 22 | 59.50 |
| எதிர்இந். | 11 | 20 | 35 | 1567 | 163 | 4 | 9 | 2 | 14 | 52.23 |
| எதிர் நியூசி. | 12 | 18 | 26 | 1218 | 205 | 4 | 4 | 1 | 26 | 52.95 |
| எதிர் சிறீலங்கா | 6 | 7 | 11 | 543 | 106 | 1 | 4 | — | 8 | 54.30 |
| உள்நாட்டில் | 45 | 80 | 137 | 5416 | 205 | 12 | 33 | 7 | 80 | 46.29 |
| வெளிநாட்டில் | 31 | 59 | 103 | 4745 | 162 | 13 | 26 | 3 | 58 | 58.58 |
| மொத்தம் | 76 | 139 | 240 | 10161 | 205 | 25 | 59 | 10 | 138 | 51.31 |

நீண்டு வளர்ந்து வானுயர
வாழ்த்துகின்றோம்

தரமான

புழுங்கல் அரிசி

தரம் I தரம் II

பச்சை அரிசி

சம்பா அரிசி

முழு நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள

# விநாயகர் அரிசி ஆலை

## ( விநாயகர் தரும நிதியம் )

கடற்கரை வீதி - பருத்தித்துறை

## உலகின் தலை சிறந்த கல்விக் கூடங்கள் 10

சுவீடன் நாட்டில் நிலவும் நீண்ட பனிக்காலத்தை உற்று நோக்குங்கள். மூன்று தலை முறைக்கு முன்னர் முடிவில்லாத இரவுநேரக் குளிரைத் தாங்க முடியாது அவதியுற்ற சுவீடன் நாட்டு முதியோர்கள், அதனால் கல்விவட்டங்களை (Study Circle) அமைத்தனர். இப்படியாகக் கல்வி வட்டங்களில் ஒன்று கூடும்பொழுது அவர்கள் எகிப்தியக்கலைகள் முதல் வெளிநாட்டு மொழிகளைக் குறிப்பாக ஆங்கில மொழியைக் கற்பது வரை பேசி வந்தனர். 1930 ஆம் ஆண்டில் சமூக சனநாயகக் கட்சி (Social Democratic Party) ஆட்சிக்கு வந்ததும், இந்தக் கல்வி வட்

# புதியனவற்றைப் படிப்பதற்கு சுவீடனில் வயதெல்லை கிடையாது

டங்ளுக்கு மதிப்பளித்து அதைத் தேசியக்கொள்கைகளில் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டது. "சுவீடன் நாட்டில் ஒரு மனிதன் தனது வாழ்நாள் முழுவதும் படித்துக்கொண்டேயிருக்கிறான்" எனச் சுவீடன் நாட்டுக்கல்வி அமைச்சைச்சேர்ந்த மேலாளரான திரு.பார்பிறோ விச்பாக் அவர்கள் கூறுகிறார். நாடு முழுவதும் இந்தக் கல்வி வட்டங்களின் செலவீனங்களில் 40 சதவீதத்தை இப்போது அரசு செய்து வருகிறது. சென்ற ஆண்டு 188 மில்லியன் டாலர்களைச் செலவு செய்துள்ளது.

இடைவிடாது, தொடர்ச்சியாக கலைத்துறையை கற்கும் மாணவர் சமூகத்தை சுவீடன் நாடு உருவாக்கிவிடுகிறது என எண்ணக்கூடாது. சுவீடனில் முதியோர் கல்வி தொழிற்துறை சார்ந்ததாகவும் அமையப் பெற்றிருக்கிறது.

ஒரு வாரத்தில் கற்பிக்கப்படும் அச்சுக்கோப்புப் பயிற்சி முதல் 28 வாரங்கள் வரை போதிக்கப்படும் வர்த்தகப் பொருண்மிய நெறி போன்ற சிறப்பு கற்கைநெறிகள் வரை இப்போது பயிற்சிகள் அளிக்கப்படுகின்றது. அரச உதவிபெற்று நாடு முழுவதும் இயங்கிவரும் 100 மத்திய நிலையங்களில் இந்தக் கற்கை நெறிகள் போதிக்கப்படுகின்றன. ஸ்டொக்கோம் (Stockholm) பட்டணத்தின் கற்றனினா வேசனி (Katarinavagen) லுள்ள ஏ.எம்.யூ (AMU) மத்திய நிலையத்தில் திரு. வால்டமார் சான்ட்பர்க் அவர்கள் கற்றுவருகின்றார். 52 அகவையுடைய இவர் ஐரோப்பாவில் வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தினால் பாதிக்கப்பட்டவர். ஆனால் அதையிட்டு இவர் கவலைப்படவில்லை. இவரது 28 வாரக் கல்விச் செலவான 12,600 டாலர்களையும் அரசு செலுத்துவதனால் தற்கால கணக்கியலையும், கணினித் தொழில் நுட்பத்தையும் இவரால் கற்கமுடியும். இவருக்கும், இவருடன் பயிற்சி பெற்றுவரும் 599 பேர்களுக்கும் அவர்கள் வாழ்க்கையை வளமாகக் கொண்டு செலுத்தக்கூடிய ஊதியத்தை அரசு வழங்குகின்றது. அதாவது திரு. சான்ட்பர்க் அவர்களுக்கு வாரம் 400 டாலர்கள் ஊதியமாக வழங்கப்படுகின்றது. ஐரோப்பாவில் புதிதாக ஒன்றிணைக்கப்பட்டிருக்கும் சந்தையிலுள்ள சுவீடன் நாட்டு நிறுவனமொன்றில், இப்பயிற்சியைப் பெறுவதன்மூலம் நிதி இயக்குனர் பதவியைப்பெற முடிமென இவர் நம்புகின்றார்.

"இது அரசுக்குச் செலவீனத்தை ஏற்படுத்தினாலும் சமூகத்துக்கு முதலீடாக உள்ளது" என அவர் கூறுகின்றார். "இதை முழுமையாகக் கணிப்பீடு செய்தால் அரசாங்கத்திற்கும் இதனால் இலாபமுண்டு" என அவர் மேலும் கூறுகின்றார்.

ஏதோ ஒரு சிக்கலில், தாம் தேவையில்லாமல் பணத்தைக் கொட்டவில்லை என சுவீடன் நாட்டவர்கள் சொல்கிறார்கள். வேலையில்லாதவர்களுக்கு தேசிய வருமானத்தில் 84% விகிதமான பணம்மட்டும் செலவிடப்படுகிறது. ஆனால் அதேவேளை, தொழில் துறை பயிற்சி திட்டங்களுக்கு தேசிய வருமானத்தில் 2.07 விகிதமான நிதி ஒதுக்கப்படுகிறது. "நாங்கள் எங்கள் சமூகத்திலுள்ள மக்களின் தேவைகளைக் கவனத்தில் எடுக்கவேண்டும். ஆனால் அதே போன்று அவர்களும் நன்மை பயக்கத்தக்கவற்றைச் செய்யவேண்டும்", எனச் சுவீடன் நாட்டுத் தேசிய தொழிற்பயிற்சிச் சபையின் இயக்குநரான திரு. பெறிற்றோலன் அவர்கள் கூறுகின்றார்.

### சிறந்த முதலீட்டாளர்கள்

சுவீடன் நாடு தொழிற் பயிற்சிக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை வெறும் புள்ளிவிபரப் புரளி என விமர்சிப்பவர்களுண்டு. தொழிற் பயிற்சித்திட்டங்களில் ஈடுபட்டிருப்போர் வேலையற்றோர் என கருதப்படுவதில்லை. சிலவேளைகளில் இந்த பயிற்சித் திட்டங்களில் முழுநேரத்தையும் செலவு செய்வதனால் சிலர் உண்மையான தொழிலைச் செய்யமுடியாதிருக்கின்றார்கள், எனக் கூறுகிறார் சுவீடன் நாட்டுப் பொருளாதார நிபுணரான திரு. கண்ணர் எலியாசன் அவர்கள். ஆனால் இது முறையாகச் செயல்படுத்தப்படுவதுதான் இதற்கெதிராக விமர்சிப்பவர்களுக்கு எதிரான காப்பாகவுள்ளது. தங்களுடைய பயிற்சி முடிவடைந்து ஆறு திங்களுக்குள், இவர்களின் 70 சதவீதமானவர்கள் தொழில்வாய்ப்பைப் பெற்றுவிடு

(19 பக்கம் பார்க்க)

# எப்போது விடியும்

சிறுகதை

—சுந்தர்



பஸ் பள்ளத்தில் விழுந்து விழுந்து மெதுவாக வந்துகொண்டிருந்தது. பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த செல்வத்தின், பல நாட்களாக சீப்பைக் காணாத தலைமயிர் காற்றை எதிர்த்து நிற்க முடியாமல் காற்றோடு ஒத்து நின்றது. அவனது சேட்டும் சாரமும் தமது சொந்த நிறத்தை மறந்து இருந்தன. சிந்தனை அவனை வீட்டுக்கு அழைத்துச் சென்றது. இப்ப வந்து எத்தனை நாளாச்சு. வரக்க ஒரு கொத்து அளவிலதான் அரிசி இருந்தது. இப்ப சாப்பாட்டுக்கு என்ன செய்கினமோ? தம்பி ஒழுங்கா பள்ளிக்கூடம் போறானோ? வரும்போது தங்கை, ''அண்ணா பள்ளிக்கூடம் துவங்கி இப்ப மூன்று கிழமை ஆகுது. இன்னும் கொப்பி ஒன்டும் வாங்கயில்லை" என்றாள். "இந்தா உதில முப்பது ரூபா இருக்கு தம்பியிட்டக் கொடுத்து கொப்பிய வாங்கு" என்று பணத்தைக் கொடுத்தான். ''இப்ப கொப்பி விக்கிற விலைக்கு உதுல எத்தன கொப்பி வாங்கிறது எப்படியும் எட்டுக் கொப்பியாவது தேவை. அப்படியெண்டால் நூற்றைம்பது ரூபாயாவது வேணும்'' என்றாள். "இப்ப இரண்டு கொப்பிய வாங்கியெடு நான் வவுனியால வரக்க மிச்சத்தை வாங்கி வாரன்" என்று சொல்லிவிட்டு புறப்பட்டவன், சிந்தனையில் இருந்து மீண்டவன் திடீரென குனிந்துபேக்கைத் தடவிப்பார்த்து விட்டு திருப்தியோடு நிமிர்கின்றான்.

"அண்ண இண்டைக்கு போட் ஓடுமாமோ'' அருகில் இருந்தவரிடம் செல்வம் விசாரிக்கின்றான். ''இண்டைக்கு ஓடும் என்று கதைக்கினம் ஆனால் உந்த நேவிக்காரர் இடையில நிண்டு என்ன செய்கிறானுகளோ. அப்படி எண்டால் என்னண்டு தம்பி போட் ஓடும்'' அவர் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். இதைக் கேட்டுக் கொண்டு அருகில் நின்றவர் "நேற்றைக்கும் போன போட்டுகளை மறிச்சு வெட்டினவனுகளாம். இரண்டு போட்டும் எரிஞ்சிகொண்டிருந்ததாம். அதோட காலையில மூன்று பொடி கரை ஒதுங்கினதாம் என்று கிளிநொச்சியில கதைக்கினம்" என்றார். முன் ஆசனத்தில் இருந்து தொடர்ந்து இருமிக் கொண்டிருந்த முதியவர் ஒருவாறு இருமலை அடக்கிக் கொண்டு "ஓம் ஓம் இந்தக் கூத்து எத்தனை நாளாத்தான் நடக்குது. உவங்கள் மனிசர விட்டவங்களோ, இல்லாட்டி மருந்தத்தான் விட்டவங்களோ. நானும் இந்த மாரடைப் பால அவதிப்பட்டு அங்க ஓடி இங்க ஓடிப் பாத்தன் சுகப்படுத்த மருந்து இருக்க வேணுமே. கடைசியிலதான் கொழும்புக்கு வெளிக்கிட்டனான். இல்லாட்டி நாங்கள் ஏன் இந்த தள்ளாடுற வயதில தண்ணியில தத்தளிக்க வேணும்'' என்றவரை இருமல் கதைக்க விடாது தடுத்தது.

''நிற்கின்றவர்கள் எல்லாம் பின்னுக்குப் போங்கோ'' என்று பஸ் நடத்துனர் கால் வைத்து நிற்க முடியாத அந்த பஸ்ஸில் இன்னும் பயணிகளை ஏற்றிக் கொண்டிருந்தார். ''இனி வாகனத்தை உடைச்சுக் கொண்டுதான் பின்னுக்குப் போக வேணும். நாங்கள் என்ன மனிசரா? இல்லாட்டி பனங்கிழங்கா? இப்படி அடுக்கிறான்'' என்று ஒரு முதியவர் புறுபுறுத்தார். ''எல்லோரும் இந்தப் பஸ்ஸிலதானே போகவேண்டும் முதல் போல இப்ப பஸ் ஓடுதா ஐயா'' என்று அவரை செல்வம் சமாதானப்படுத்தினான்.

பஸ் ஒவ்வொரு பள்ளத்திலும் விழுந்து எழும்பும்போது இடுப்பிலே குழந்தையுடன் நின்ற ஓர் இளம்பெண் நிற்க முடியாமல் தடுமாறினாள். வாகனத்தின் மண்ணெண்ணெய் புகைக்கும் சன நெருக்கத்துக்கும் ஈடு கொடுக்க முடியாத அக்குழந்தையின் அழுகுரல் வாகனத்தின் இரைச்சலை முந்திக்கொண்டு நின்றது. அப்பெண் மீது பரிதாபப்பட்ட செல்வம்

எழுந்து நின்று கொண்டு இருக்க இடம் கொடுத்தான். நன்றி கலந்த பார்வையுடன் அப்பெண் அமர்ந்து கொண்டாள். செல்வம் நின்ற இடத்திற்கு பக்கத்தில் இருந்த ஒரு சிறுவன் தாயிடம் "அம்மா பசிக்குது" என்று அடம் பிடித்தான். பேக்கைப் பார்த்த தாய் மூன்று பிஸ்கட்டுகளை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அதைச் சாப்பிட்டு முடித்தவன் மீண்டும் அதே பல்லவியைப் பாடினான். "இப்ப பிஸ்கட் இல்லை ஆலங்கேணியில் போய் இறங்கியதும் வாங்கித் தாறன்" என்று சமாதானப்படுத்தினாள். அதைக் கேட்டுக்கொண்டு வந்த செல்வம் இவர்கள் அங்க போய் என்ன வாங்கப் போகிறார்கள். அப்படி வாங்கிறதெண்டாலும் ஒன்றுக்கு நான்கு மடங்கு விலை விக்கும். இவர்கள் இப்பதான் முதல் தடவயாய் வருகினம் போல" என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

குஞ்சுப்பரந்தனைத் தாண்டி பஸ் செல்லும்போது ஒரு உழவு இயந்திரத்தைச் சுற்றி இருபது பேர் வரையில் நின்றார்கள். என்ன விசயம் என்று விசாரித்த போது "அது காலையில ஒதுங்கின மூன்று பொடி கொண்டு போகினம்" அதில் நின்றவர் எல்லோருக்கும் கேட்கும்படி சொல்கிறார். ஒரு ஆணின் சடலம் வயிறு பிளந்து கத்தியால் வெட்டியது என்று பறைசாற்றிக்கொண்டிருந்தது. ஒரு பெண்ணின் சடலத்தின் கழுத்துப் பகுதி சிதைந்திருந்தது. காதிலோ கழுத்திலோ எதுவித நகையும் இல்லாதது வெறியர்களின் குண இயல்பை வெளிப்படுத்தியது. ஒரு சிறுமியின் முகம் மதிக்க முடியாமல் சிதைந்திருந்தது. இதைப் பார்த்த ஒரு ஆச்சி "ஐயோ கடவுளே இதற்கு முடிவே இல்லையா? நல்லூர்க் கந்தா நீதான் எல்லோரையும் காப்பாத்த வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

ஆலங்கேணியில் போய் இறங்கியதும் எல்லோரும் மர நிழல்களைத் தேடிச் சென்றனர். மர நிழலிலும் நடு வெய்யிலிலுமாக சன வெள்ளமாக இருந்தது. இன்று போட் ஓடும் என்று கேள்விப்பட்டு இன்னும் பலபேர் வந்து சேர்ந்தனர். வெயில் உடலை வாட்டிக்கொண்டிருந்தது. செல்வம் அங்கு நின்ற ஒருவரிடம் "இண்டைக்கு எத்தனை மணிக்கு போட் வெளிக்கிடும்" என்று கேட்டான். "ஏழு மணிக்குப் பிறகுதான் வெளிக்கிடும் அதுக்குமுதல் போனால் ஹெலி பொம்மர் அடிக்கும் எண்டதால இருட்டினாற் பிறகு போறவங்கள்" என்றார். எல்லோரும் பெயர் பதியும் இடத்தில் செல்வமும் பெயரைப் பதிந்து கொண்டான்.

மாலை ஆறு மணியளவில் எல்லோரும் கடற்கரையை அடைந்தனர். போட்டில் ஏறும்படி கூறியதும் நான் முந்தி நீ முந்தி என்று ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு ஏறினார்கள். "எண மோனே என்னை ஒருக்கா தூக்கி விடடா" என்று இரண்டு அடி ஆளம் உள்ள சேற்றில் புதைந்த ஆச்சி செல்வத்தின் கையைப் பிடித்துக் கொண்டார். "அம்மா சேறு சேறு என்னைத் தூக்குங்கோ" என்று ஒரு சிறுமி அலறினாள். இப்படி அமளி துமளிப்பட்டுக் கொண்டிருக்கும் போது பூனகரி இராணுவமுகாம் கடல் பகுதியில் துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டது. அப்போது 'நேவிக்காரனுக்கும் எங்கடபொடியளுக்கும் கடலில சண்டை நடக்குதாம். அதனால இன்றைக்கு போட் போகாது. இனி போறதப்பற்றி பிறகு அறிவிக்கின்றோம்" என்று படகு சேவைப் பொறுப்பாளர் அறிவித்தார்.

படகு செல்லாததனால் நனைந்தபடியும் சேற்றோடும் தமது பழைய இருப்பிடங்களை சென்றடைந்தனர் "அம்மா குளிந்து உடுப்பை மாற்றி விடுங்கோ" என்று ஒரு சிறுவன் கேட்க "உடுப்பு பேக்கும் நனைஞ்சு போட்டுது காலையில காயவைச்சு போடுவோம். என்று அவனைத் தேற்றினாள் தாய். அதைப்புரிந்து கொண்டவன் மணல்தரையில் சுருண்டு கொண்டான்.

ஒரு மரத்தின்கீழ் செல்வமும் சென்று அமர்ந்து கொண்டான். செல்வத்தின் சொந்த ஊர் அளவெட்டி. செல்வத்தின் தந்தை இந்திய இராணுவம் எமது மண்ணை ஆக்கிரமித்திருந்த

---

## இராமானுசம்

தமிழ்நாட்டில் பிறந்து இளம் வயதில் இறந்த கணிதமேதை இராமானுசம் தன் சிலேட்டுப் பலகையில் கிறுக்கிய கணக்குகளை இன்று IBM நிறுவனம் கணினிகளை செய்ய உபயோகித்து வருகின்றது. மேலும் இவருடைய தேற்றங்கள் ரொக்கெட் தொழில் நுட்பம், கிறிப்டாலஜி போன்ற அறிவியல் ஆய்வுகளுக்கு பெரிதும் பயன்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**உலகின் தலை சிறந்த கல்வி கூடங்கள்**

17 பக்கத்தொடர்ச்சி .....

கின்றார்கள் என்பது வரலாற்று ரீதியான உண்மையாகும். 59 ஆண்டுகளில் மூன்று முறை ஆட்சிக்கு வந்ததும், சமூக சனநாயகக் கட்சியைத் தோற்கடித்துப் புதிதாக ஆட்சிக்கு வந்ததுமான பழமைவாதக் கட்சிக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும். நாட்டின் பலபகுதிகளிலும் 'தொட்டிலிலிருந்து சுடுகாடு' வரை சமூக நலன்புரி சேவைகள் சுவீடனில் இருப்பதாக பழமைவாதிகள் கட்சி விமர்சித்தபோதும், சமூக சனநாயக கட்சிக்காரர்களை விட கூடுதலான நிதியை தொழிற் பயிற்சிக்கு செலவிட உறுதியளித்திருக்கிறார்கள். உடல் வலிமையுள்ளவர்களுக்கு மிகவும் உபயோகமான தொழிற்பயிற்சியை அளிப்பது நல்ல காரியமல்லவா? இதைவிட நலலமுதலாளிகள் வேறு எதைத்தான் செய்ய முடியும். □

வேளை தேச விரோதிகளால் கொல்லப்பட்டார். செல்வத்திற்கு ஒரு தங்கையும், தம்பியும் இருக்கிறார்கள். செல்வம் சிறு வயதிலேயே படிப்பை நிறுத்திவிட்டு தந்தையுடன் தோட்டத்திலே நின்றவன். ஆனால் தங்கையையும், தம்பியையும் ஒழுங்காக படிப்பித்தான். தந்தை இறந்தபின் வீட்டுப் பொறுப்பு அனைத்தும் செல்வத்தின் தலையிலே ஏறியது. அவனது கடும் உழைப்பினால் தந்தை இல்லை என்ற குறை அவர்களை பெரியளவில் பாதிக்கவில்லை. இந்திய இராணுவம் சென்ற பின் சிறீலங்கா இராணுவத்தின் பொருளாதாரத் தடையாலும் அளவெட்டி முற்றுகையாலும் தனது சொந்த ஊரைவிட்டுவந்து மானிப்பாயில் தெரிந்தவர் ஒருவரது வளவில் ஒரு குடிசையை அமைத்துக் கொண்டு இருந்தான். வேலை தேடித்திரிந்து ஒரு வேலையும் கிடைக்காததனால் இருந்த நகையை விற்று வவுனியா சென்று சாமான் ஏற்றிவந்து விற்று வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தான். பாதைகள் முற்றுகை காரணமாக இந்த கிளாலிப் பாதையால் தான் பல சிரமங்களுக்கு மத்திலும் தனது தொழிலைச் செய்கிறான்.

மாசிப் பனியோடு சேர்ந்து உடல் நனைந்திருந்ததால் செல்வத்திற்கு நடுக்கம் எடுத்தது. தங்கைக்கு வாங்கிய கொப்பிநனைந்து விட்டதா என்று எடுத்தவன் "நல்ல வேளை சொப்பிங்பாக்கில் இருந்ததால் நனையவில்லை" என்று முணு முணுத்தவன் இன்னும் கொஞ்சம் இறுக்கிக் கட்டிக் கொண்டிருக்கும் போது "அட செல்வமே நீ எப்பவந்தனி" என்று பக்கத்து வீட்டு கனகு அருகில் வந்து இருந்துகொண்டான். "இப்ப நான் வந்து ஒருமாதமாமப்போகுது நானும் போவம் போவம் என்று வெளிக்கிடுறன் எப்படிப்போறது" என்று அலுத்துக் கொண்டான். "அப்ப உனக்கு உந்தவிசயம் தெரியாதே உன்ர தம்பியல்லே இரண்டு கிழமைக்குமுதல் இயக்கத்துக்கெண்டு போட்டான்." இதைக்கேட்டதும் செல்வத்திற்கு வேற ஒரு கதையும் விளங்கவில்லை "இப்ப அம்மாவும் தங்கச்சியும் என்ன செய்யினமோ" என்று பதறினான். எப்படியாவது நாளைக்காவது வெளிக்கிடுவது என்று முடிவெடுத்தான்.

அங்கோடி இங்கோடித் திரிந்து ஒரு மாதிரி தன்னுடைய நிலமையைச் சொல்லி சாமான் கொண்டு போகும் போட்டில் போவதற்கு அனுமதி பெற்றுக்கொண்டான். இரவு ஏழுமணி போல் ஐந்து போட்டுகள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிக்கிட்டன. அதில் ஒன்றில் செல்வமும் ஏறிக் கொண்டான். "ஏதும் பிரச்சினை என்றால் எல்லோரும் பாய்ந்து நீந்தித்தான் வரவேண்டும். அந்த மாதாதான் எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொண்டு படகோட்டி படகைச் செலுத்தினார். தூரத்தில் இடையிடையே துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. போட் நடுக்கடலில் சென்றதும் "அங்கே பாருங்கள் ஏதோ கருப்பா நாலு உருவம் தெரியுது, அதுநேவியாகத்தான் இருக்கவேண்டும். எல்லோரும் குதியுங்கள்" என்று கத்திவிட்டு படகோட்டிமார் எல்லோரும் குதித்து நீந்தத் தொடங்கினார்கள். சிறுவயதில் இருந்து தோட்டத்தில் நின்ற செல்வத்திற்கு எங்கே நீந்தத் தெரியும். துப்பாக்கி ரவைகள் தீப்பிழம்பாக வந்து படகுகளை சல்லடை போட்டன. செல்வம் தங்கைக்கு வாங்கி வந்த கொப்பிப் பார்சல் மெது மெதுவாக ஆடி, ஆடி நீரிலே தாண்டு கொண்டிருந்தது. ●

## திருக்கைகள்

திருக்கைகளில் பல வகைகள் உண்டு. இவற்றில் ஊசி முனைத் திருக்கை நஞ்சுள்ளது. இதன் வாலில் ஊசி போன்ற இரண்டு உறுப்புக்கள் இருக்கின்றன, இவற்றின் மூலம் நஞ்சை செலுத்துகின்றது. உலகில் இதன் தாக்குதலால் ஆண்டு தோறும் 1500 பேர் வரையில் கொல்லப்படுகின்றனர். இவ்வுறுப்புக்கள் உடைந்து விட்டாலும் மீண்டும் வளர்ந்து விடும்.

## மிகப் பெரிய வழிபாட்டுக் கட்டடம்

*உலகின் மிகப் பெரிய மத வழிபாட்டுக் கட்டடம் கம்பூச்சியாவில் உள்ளது. இரண்டாம் சூரிய வர்மனால் 402 எக்கர் பரப்பளவில் அது கட்டப்பட்டது. ஏழுபத்திரண்டு பிரதான அமைப்புக்களை உள்ளடக்கிய அக்கட்டிடம் மகாவிசுணுவை வழிபடுவதற்காக கி. பி 900ல் கட்டப்பட்டது. அது இன்று "அங்கோர்வாட்" என அழைக்கப்படுகின்றது.*

# மொன்றோ கோட்பாடு (Monroe Doctrine)

—உமா

அமெரிக்க கண்டங்களின் அரசியல் விவகாரங்களில் தலையிடும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராக பிரகடனப்படுத்தப்பட்ட அமெரிக்கக் கொள்கையே மொன்றோ கோட்பாடாகும்.

இக் கோட்பாடானது பிராந்தியம் சம்பந்தமாக இன்று எல்லா நாடுகளாலும் பின்பற்றப்பட்டு வரும் கோட்பாடாகவும் இருக்கிறது. தமது பிராந்தியத்தில் அந்நிய தலையீட்டை, ஆதிக்கத்தை உடைப்பதற்காக நடைமுறைப் படுத்தப்படும் கோட்பாடாக காணப்படுகிறது.

அமெரிக்காவை எடுத்துக் கொண்டால், அது தனது கண்டம் என்ற நிலையை விடுத்து பிராந்தியம் என்ற ரீதியில் இக் கோட்பாட்டை பிரயோகிக்கிறது. அமெரிக்கா வியட்நாம் மீது மேற்கொண்ட ராணுவ நடவடிக்கையை இவ்வாறே அவர்கள் கொண்டனர். இதன் ஒரு அடிப்படையிலேயே பிலிப்பைன்ஸில் தமது ராணுவத் தளம் ஒன்றை அமெரிக்கா வைத்துள்ளது.

இன்று இக் கோட்பாடு அனைத்து உலகினாலும் கடைப்பிடிக்கப்படும் ஒன்றாகவும், பொதுவான ஒரு கோட்பாடாகவும் காணப்படுகிறது.

குறிப்பாக இந்த மொன்றோ கோட்பாடு வல்லரசுகளினால், அது பிராந்திய வல்லரசாகவோ, பெரு வல்லரசாகவோ, ஏக வல்லரசாகவோ, வல்லரசாகவோ இருக்கின்ற நாடுகளினால் தமது அரசியல் லாபத்திற்காக வெவ்வேறு வகைகளில் பிரயோகிக்கப்படுகிறது.

உதாரணமாக பிராந்திய வல்லரசான இந்தியா தனது பிராந்தியத்தில் தனது செல்வாக்கை நிலைநாட்டுவதற்கு, அந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் மீது மேலாண்மைக் கொள்கையை நடைமுறைப் படுத்துகிறது. பூட்டான், நேபாளம், மாலை தீவு ஆகிய நாடுகளையும் இலங்கையையும் தனது அரசியல் நோக்கத்திற்காக பயன்படுத்துவதோடு மாத்திரமன்றி அந்த நாடுகளில் பிற நாட்டவரின் ஆதிக்கமும், தலையீடும் வலுப்பெறாதிருக்கும் வகையில் தனது கொள்கையை வகுக்க எத்தனிக்கிறது.

இவ்வாறான மொன்றோக் கோட்பாடானது *1823* இல் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜேம்ஸ் மொன்றோ என்பவரால் முன் வைக்கப்பட்டது. இதனாலேயே இக் கோட்பாட்டுக்கு "மொன்றோ கோட்பாடு" எனப் பெயர் இடப்பட்டது. இக் கோட்பாடு ஏற்படுவதற்குரிய சூழல் *1821* இல் அமெரிக்காவில் உருவானது.

1821 இல் அமெரிக்காவின் வடமேற்குக் கரையிலிருந்து அலான்காவுக்கு வரும் கப்பல்களை ரஷ்யா தடை செய்திருந்தது. (அப்போது அலாஸ்கா ரஷ்யர்கள் வசமாக இருந்து பின்னர் அமெரிக்காவிற்கு விற்கப்பட்டது.) அத்துடன் ரஷ்யா ஒஸ்ரியா, பிரஷ்யாவுடன் இணைந்து தென் அமெரிக்காவிலுள்ள சுதந்திரமான அரசுகளை கைப்பற்றுவதற்கு ஸ்பானியாவுக்கு உதவி அளித்தது.

இந்தக் கட்டத்தில் 1828 இல் அமெரிக்கா ஜனாதிபதியாக இருந்த ஜேம்ஸ் மொன்றோ இந்தப் பிரகடனத்தை அறிவித்தார். பிரகடனத்தின் விபரம் வருமாறு.

"இது வரை காலமும் தனித்துவமாகவும் சுதந்திரமாகவும் இயங்கி வந்த அமெரிக்கக் கண்டம் இனிமேல் எக்காலத்திலும் எந்த ஐரோப்பிய சக்திகளின் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு உள்ளாகப் படாதவகையில் தீர்மானிக்கப்படவேண்டும். ஐரோப்பிய சக்திகளின் நடமாட்டமும் நோக்கங்களும் எமிகள் அமெரிக்க முறைகளுக்கு வேறுபட்டதாக இருக்கின்றது. எங்கள் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் அந்தச் சக்திகளின் கூட்டமைப்பு மிக மிக அபாயகரமாக இருக்கிறது." என்று குறிப்பிட்டார்.

*1865* இல் இந்தப் பிரகடனம் முதல் முறையாக பிரயோகிக்கப்பட்டது. மெக்சிக்கோவை தன் வசப்படுத்த முயன்ற பிரான்சிற்கு எதிராக இது பயன்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கையினால் பிரான்ஸ் இதிலிருந்து விலகிக் கொண்டது.

காலப்போக்கில் இக் கோட்பாடு எல்லா அமெரிக்கக் குடியரசு நாடுகளிலும் அமுல் செய்யப்பட்டது. *1942* இல் செய்யப்பட்ட லைமா (Lima) தீர்மானத்தின்படி பான் அமெரிக்கன் (Pan American) நாடுகள் அத்தனையும் அனைத்து வெளிநாட்டு தலையீடுகளை கூட்டமாக எதிர்ப்பது என்று தீர்மானித்தது.

*1947* இல் ரியோ டி ஜெனரோவில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இந்தத் தீர்மானம் மேலும் வலுவாக்கப்பட, அமெரிக்க நாடுகள் ஏதாவது தாக்கப்பட்டால், பாதிக்கப்பட்டால், ஊடுருவப்பட்டால் அனைத்து அமெரிக்க நாடுகளுமே தாக்கப்பட்டதாக உணரப்பட வேண்டும். என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த வகையிலேயே கியூபாவில் ரஷ்யாவால் பொருத்தப்பட்ட ஏவுகணைகள் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தும் என்ற வகையில் அகற்றப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. ★

# குழந்தையும் முதல் ஆண்டு உணவும்

ஒவ்வொரு பெற்றோரும் தங்களது குழந்தையின் முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடும் போது அக் குழந்தையானது போசாக்கு நிறைந்த ஒரு ஆரோக்கியமான உடல்வாகு கொண்டதாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஒவ்வொரு பெற்றோரினதும் இந்த எதிர்பார்ப்பு நிறைவேற வேண்டுமாயின் குழந்தை பிறந்ததிலிருந்து அதன் போசாக்கில் கவனமெடுப்பதன் மூலமே சாத்தியமாக முடியும். ஒரு குழந்தை நல்லவராவதும் தீயவராவதும் மட்டுமல்ல, ஆரோக்கியம் நிறைந்ததாக அமைவதும் கூட அன்னை வளர்ப்பிலே.

குழந்தை பிறந்ததிலிருந்து முதலில் தாய்ப்பாலும் பின்னர் தாய்ப்பாலுடன் உபஉணவுகளும், அதனைத் தொடர்ந்து நிறையுணவும் முதல் ஒரு வருடத்திற்குள் கொடுக்கப்படவேண்டும்.

குழந்தை பிறந்து சில நிமிடங்களுக்குள் தாய்ப்பாலூட்டல் ஆரம்பிக்கப்படவேண்டும். தாயிலிருந்து சுரக்கப்படும் கடும்புப்பாலானது (முதற்பால்) குழந்தையின் ஆரம்பகால நோயெதிர்ப்புச் சக்திக்குக் காரணமாகின்றது. ஆரம்பத்தில் பால்சுரப்பு குறைவாக இருக்கலாம், ஆனால் மனம் தளராது தொடர்ந்து பாலூட்டுவதன் மூலம் பால்ச்சுரப்பினை அதிகரிக்கலாம். குழந்தை முலைக்காம்பில்வாயை வைத்து உறிஞ்ச உறிஞ்ச நரம்புகளின் தூண்டலினால் பால்ச்சுரப்பு அதிகரிக்கப்படுகின்றது. கிட்டத்தட்ட ஏழு நாட்களில் குழந்தைக்குத் தேவையான 600 - 700மில்லிலீற்றர் பால் சுரக்கப்படுகின்றது ஆரம்பத்தில் இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை பால் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் இரண்டு மார்பகங்களினாலும் பாலூட்டல் வேண்டும். அத்துடன் தாயானவள் கர்ப்பகாலத்தினைப் போன்று சத்துள்ள உணவுகளையும், போதியளவு நீரையும் உட்கொள்ளுதல் மிக அவசியமாகும் மேலும் ஒரு தாய்மனக்குழப்பம், சஞ்சலமின்றி, உளரீதியான சமநிலையைப் பெற்றிருத்தலும் பால் சுரத்தலின் அளவை அதிகரிக்கச் செய்கின்றது. தாய்ப்பாலூட்டலானது குழந்தையின் ஆரோக்கியத்திற்கும், போசாக்கிற்கும் மட்டுமன்றி தாய் சேய் உறவிலும் ஒரு ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

குழந்தை வளர வளர அதன் உணவுத்தேவைகளும் அதிகரித்துச் செல்லுகின்றது. இதனைத் தாய்ப்பாலினால் மட்டும் ஈடு செய்து விடமுடியாது. ஆகவே தாய்ப்பாலுடன் உபஉணவுகளும் சேர்க்கப்படல் வேண்டும். 2ம் மாதத்திலே பழரசத்தினைக் கொடுக்கத் தொடங்கலாம். இதனைத் தொடர்ந்து 3ம் மாதத்திலே ½ தேக்கரண்டி வாழைப்பழம், அல்லது பப்பாசிப் பழத்தை மசித்துக் கொடுக்கலாம். இது மலச்சிக்கலைத் தடுக்க உதவுகிறது. 4ம் மாதம் முடிய அரை அவியல் முட்டையின் மஞ்சட்கருவில் தினமும் ½ தே. க. சேர்க்கலாம். 5ம் மாதத்திலிருந்து ½ தே. க. வெள்ளைக் கருவையும் சேர்க்கலாம். அத்துடன் கஞ்சித் தெளிவு, மரக்கறி சூப், சிறு மீன் போன்றவற்றையும் உங்கள் குழந்தைக்கு கொடுக்கலாம். உங்கள் குழந்தை 6ம் மாதமளவில் அரை முட்டையைச் சாப்பிடும் அளவுக்கு வந்து விடும்.

3ம் மாதம் தொடக்கம் 6ம் மாதம் வரையிலான காலப் பகுதியிலே குழந்தை யின் நாக்கில் சுவையரும்புகள் விருத்தியடைகின்றன. இவற்றின்வளர்ச்சியின் போது குழைந்தயானது வெவ்வேறு உணவு வகைகளின் உருசித்தன்மையைப் பகுத்தறிந்து கொள்கிறது. எனவே இக்காலப்பகுதியிலே நாம் அன்றாடம் உண்ணும் உணவுகளின் மாதிரியைக் குழந்தைக்கு அறிமுகப்படுத்த வேண்டும். இந்த நோக்கில் இக் காலப் பகுதியில்கஞ்சித் தெளிவு, பொரியரிசி மாக்களி, பருப்பு, மற்றும்கீரை போன்றவற்றின் வடிசாறு போன்ற உப உணவுகளைக் கொடுத்தல் அவசியமாகின்றது. இந்த முன்னேற்பாடானது 6மாதங்களின் பின் குழந்தையானது உணவுப்பதார்த்தங்களை விரும்பி உண்ண வழி வகுக்கின்றது.

6 மாதங்கள் முடிய குழந்தைக்கு கட்டாயமாகச் சோறு ஊட்டப்பட வேண்டும். 6 வது மாதத்தில் ஒரு சம்பிரதாயத்திற்த கோயிலுக்குச் சென்று 'சோறுதீத்தல்' என்ற சடங்கை முடித்து விட்டு, பின் தாய்ப்பாலை மட்டும் அடுத்த 3 மாதங்களுக்கும் கொடுக்கும் வழக்கம் எமது சமூகத்தில் தாய்மார்களில் காணப்படுகிறது. இந்த நிலையினாலே எமது குழந்தைகளின் நிறை அதிகரிப்பு வீதமானது 6 மாதங்களிலிருந்து குறைவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. 6ம் மாத முடிவில் மசித்த சோற்றுடன் கீரைக்கறி அல்லது பருப்புக்கறி போன்றவற்றை சிறுகச் சிறுக கொடுக்கத் தொடங்கலாம் 7ம், 8ம் மாதங்களில் இடியப்பம், பாண் போன்றவற்றை மசித்த முட்டை, பருப்பு, சிறிய மீன் போன்றவற்றுடன் கொடுக்கலாம். ஆரம்பத்தில் குழந்தைகள் உண்ண மறுத்துத் துப்புவார்கள். சிலவேளைகளில் வாந்தி கூட எடுப்பார்கள். ஆகவே இதை மனதில் கொண்டு

செல்வி சிவனேஸ்வரி இராசையா
மருத்துவ பீட மாணவி
யாழ் பல்கலைக் கழகம்

சோர்வடையாமல் கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு நாளும் ஊட்டி வருவதன் மூலம் குழந்தையில் உணவுப் பழக்கத்தை ஏற்படுத்தலாம்.

9ம் மாதத்திலிருந்து பெரும்பாலும் பெரியவர்கள் உண்ணும் உணவைக் கொடுக்கலாம். ஆனால் உறைப்பையும், எண்ணெய்யையும், இறைச்சி போன்ற கடினமான உணவுகளையும் தவிர்ப்பது நன்று. காலை. மாலை உணவாக இடியப்பம், பிட்டு, தோசை, இட்டலி, அப்பம் முதலியவற்றை பால்ச்சொதியுடன் அல்லது பழங்களுடன் கொடுக்கலாம். மதிய உணவாக சோற்றுடன் பால்க்கறி, பருப்பு, இலைக்கறி, கிழங்கு, முட்டை, மீன் போன்றவற்றைச் சேர்த்துக் கொடுக்கலாம். உங்கள் குழந்தை முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடும் போது உங்களுடன் சரிசமமாக மேசையிலிருந்து உங்களைப் போன்ற நிறையுணவை உண்ண வேண்டும்.

தாய்மார்களே! உங்கள் குழந்தை உடல், உளரீதியாக ஆரோக்கியம் பெற்று வளர அதன் முதல் வருடப் போசாக்கில் கவனம் செலுத்துவது மிக மிக அவசியமானது. ஒரு தனிமனிதனை ஆரோக்கியமானவனாக உருவாக்குவதாக மட்டும் தாய் நினைத்துவிடக் கூடாது. அதற்கும் அப்பால் ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குகின்றோம் என ஒவ்வொரு தாயும் எண்ணத் தலைப்பட வேண்டும். எங்கள் சமூகத்தின் எதிர்காலச் சிற்பிகளான உங்கள் மழலைகளை ஆரோக்கியமானவாகளாக வளர்த்து விட இன்றே சபதம் செய்யுங்கள். □

## மின் மினிப் பூச்சி

மென்மையான உடலும் சற்று கருநிறமும் கொண்டது மின்மினிப் பூச்சி. ஆணுக்கும், பெண்ணுக்கும் சிறகுகள் உண்டு. இதன் அடிவயிற்றில் இருக்கும் உறுப்பு ஒன்றுதான் ஒளியை உற்பத்தி செய்கின்றது. நரம்புகளால் இயங்கும் இந்த உறுப்பில் லூசிஃபெரின் (Luciferin) லூசிஃபெரேசு (Luciferin) என்ற இரு பொருட்கள் உண்டு. லூசிஃபெரின் உயிர் வாயுவுடன் இணையும்போது ஒளி உண்டாகின்றது லூசிஃபேரேசு இந்த இணைவியக்கத்தை ஊக்கியாக செய்யப்படுகின்றது இவ்வொளி வெப்பம் தராது. இனப்பெருக்கம் செய்யவே இவை ஒளியை உமிழ்கின்றன என அமெரிக்க பிளோரிடா பல்கலைக் கழக பேராசியர் ஜெ. ஈ. வாய்ட் குறிப்பிடுகிறார்.

## பட்டுத்துணியின் பளபளப்பு

சுத்தமான பட்டுத்துணி பட்டுப்பூச்சி வெளியிடும் பட்டு இழைகளால் நெசவு செய்யப்படுகிறது. இது சாதாரண நூல் இழையைப்போல் உருளை வடிவானது அல்ல. முப்பட்டை வடிவானது. தன்மீது படும் ஒளியை இது சிதறடிக்கும் இதனால் தான் பட்டுத்துணி பளபளக்கின்றது.

## ஈழ மண் மகன்.

பூனையைப் போல் ஓர் மூலையில் படுத்தான்,
பூமியை மறந்தே வாழ்ந்திடத் துடித்தான்,
புலியாய் இன்று சீற்றம் கொண்டான்,
புயலாய் மாறி ஏற்றம் கண்டான்,
இவனா என் மகன்?! இல்லை,
இவன்தான் இந்த மண் மகன்.

(பூனையைப் போல்)

இருட்டைக் கண்டால் நடுங்கிக் கொள்வான்,
இடையில் வந்து முடங்கிக் கொள்வான்,
இரவு முழுவதும் விழித்தே இருப்பான்,
இதயத் துடிப்பால் செத்தே பிழைப்பான்,
புலியாய் இன்று சீற்றம் கொண்டான்,
புயலாய் மாறி ஏற்றம் கண்டான்,
இவனா என் மகன்?!—இல்லை,
இவன்தான் இந்த மண் மகன்.

(பூனையை போல்)

நாட்டை மறந்தே வாழத் துடித்தான்,
நாலு பேருக்கும் சுமையாய் இருந்தான்,
வீட்டுக்குள்ளே வெம்பிக்கிடந்தான்,
வீரம் இல்லாப் பிள்ளையானான்,
புலியாய் இன்று சீற்றம் கொண்டான்,
புயலாய் மாறி ஏற்றம் கண்டான்,
இவனா என் மகன்!? இல்லை,
இவன் தான் இந்த மண் மகன்.

(பூனையைப் போல்)

எறிகணை கண்டான் எதிரியை அழித்தான்,
பசிலன் கொண்டு பகைவரை ஒழித்தான்,
கண்ணி வெடியினில் கயவரை ஒடித்தான்,
கண் வெட்டும் பொழுதினில் கணக்கை முடித்தான்,
புலியாய் இன்று சீற்றங் கொண்டான்,
புயலாய் மாறி ஏற்றம் கண்டான்,
இவனா என் மகன்!?—இல்லை,
இவன்தான் இந்த மண் மகன்,
இவன்தான் ஈழ மண் மகன்!

(பூனையைப் போல்)

நாக. இரத்தினம்

அரிசி விலை ஆனை விலை என்றாகிவிட்டது. என்ன செய்வது...? போக்குவரத்து, மின்சாரம் இவைகள் தாம் இவ்விலையேற்றத்திற்கு காரணம்.

ஆனாலும், வாங்கும் அரிசியும் தரமானதாக இல்லை, புழு(ங்)கல் அரிசியாகவுள்ளது என கவலைப்படுகிறீர்களா?

கவலை வேண்டாம். எம்மிடம் தரமான சுவையான அரிசிவகைகள் கிடைக்கும்.

தரம் I    தரம் II

புழுங்கல், உடைத்தபச்சை, தீட்டுப்பச்சை

இவைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். எஸ். ஆர். அரிசி ஆலை

முதலாம் கட்டை, டச்சு வீதி,
சாவகச்சேரி.

# வடமராட்சி கிழக்கில் வளராத கல்வி நிலை

—திருமலை யோகேந்திரம்

1993 பங்குனித் திங்கள் இருபத்தொன்பதாம் நாள். ஆர்ப்பரிக்கும் கடலலையருகே அமைந்துள்ள மணற்குன்றுகளைக் கண்களால் மேய்ந்தபடி விதிப்புழுதிகளைக் கிளப்பியவாறு, கழுத்துச் சதங்கைகளின் தாளத்திற் கேற்றபடி — ஓடிக்கொண்டிருந்த வண்டிக் காளைகள்; வடமராட்சிக் கிழக்கின் காலைப்போதில் நாங்கள் கால்பதித்ததை உறுதிசெய்திட்டன.

ஏறக்குறைய 290 சதுரமைல் பரப்பளவு கொண்ட வடமராட்சிப் பிரதேசத்தின் மூன்றிலொரு பகுதி நிலம் வடமராட்சிக் கிழக்கிற்குரியது.

பனைமுனை முதல் சுண்டிக்குளத் தொடுவாய் வரை விரிந்திருந்து இப்போது வலிகண்டியிலிருந்து சுண்டிக் குளத்தொடுவாய் வரையே மெல்லெனச் சுருங்கிய இம் மண்ணிலுள்ள வல்லிபுர ஆழ்வார் கோவில் – நாகதம்பிரான் கோவில், மண்டலாய் விநாயகர் கோவில் ஆகியன பல நூற்றாண்டு வரலாற்றைச் சொல்ல – இவ்விடத்து நிற்கும் கிறிஸ்தவக் கோவில் மிக்க இரு நூற்றாண்டுக்குள்ளான காலங்காட்டும்.

கோபுரம் போல் திகழும் எம்நாட்டின் கல்வி – வடமராட்சிக் கிழக்கில் படரும் நிலையை அறியத் துடித்த எம்மை நோக்கிய, திரு. வே. ஜேம்ஸ் சபாபதி ஆசிரியர் – நாகர்கோயில் மகா வித்தியாலயத்தில் வடமராட்சிக் கிழக்குப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களின் ஒன்றுகூடலைக் குறித்துரைத்தார்.

வடமராட்சிக் கிழக்கில் உடுத்துறை. நாகர்கோயில் கொத்தணிகளாகியவற்றுள் 17 பாடசாலைகள் இயங்குதலும், ஏறக்குறைய ஐயாயிரம் பேருக்கு மேலானோர் கல்வி பெறுனராய் உள்ளதும், இம்மாணவர்க்கு கல்வியூட்டும் 125 ஆசிரியர்களுடன் கல்வி வளர்ச்சிக் கழகம் கொடுத்துதவியுள்ள 47 ஆசிரியர்களுமாகக் கல்விப் பணி புரிவதும்—

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆழியவளை ஆகிய இடங்களில் இருந்து வந்த பாடசாலைகள் யாவும் சிறிலங்கா இராணுவத் தாக்குதலினால் 14- 7- 1991 முதல் இடம் பெயர்ந்து செம்பியன் பற்றில் தனித்தனி இயங்குவதையும்-

தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலையினூடு கட்டைக்காடு மாணவர்கள் ஐம்பதின்மர் கல்வி பெறும் நிலையையும் – ஒன்று கூடல் வெளிச்சமாக்கியது.

இவற்றை நேரில் காணும் முயல்விற்குத் துணையெனச் செம்பியன்பற்றுப் பிரதேச சன சமூக நிலையங்களின் சமாசத்தின் தலைவராகத் தொழிற்படும் ஆசிரியர் அ. டொ. அரியரஞ்சன் அவர்கள் எம்மைத் தொடரலானார்.

**தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலை**

ஆறாம் ஆண்டு வரையிலான முன்நூற்றுக்குட்பட்ட மாணவர்கள் கற்கும் இவ்விடத்து அதிபர் திருமதி எஸ். மாசிலாமணி அவர்களுடன், கட்டைக்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையின் அதிபர் திரு. சி. பாக்கியநாதன் பணிபுரிகின்றார்.

வடமராட்சிக் கிழக்கிலுள்ள பாடசாலைகள் பலவற்றில் கல்வி நிலை மேம்பாடுற நீங்கள் சுட்டும் இப்போதைக்குரிய வழி யாது.

*பாடசாலைகளைப் பொறுத்தவரை கல்வியின் பணிகைக்குப் பொறுப்பானவர்கள் கல்வித் திணைக்கள அதிகாரிகள்தான். இங்கு நிலவும் போக்குவரத்துச் சிக்கல், தொடர்புறும் நிலையின் சிரமம் இவற்றை உணர்ந்து கொண்டு எங்கள் பணிபற்றிய அழைப்புகளையும் - பணிப்புரைகளையும் காலநேரத்திற்கு அறிவிக்கவேண்டும்-தவிரவும்; இங்கு கடமையாற்றும் அதிபர்கள் ஆசிரியர்கள் தம்பொறுப்புக்களைத் தெரிந்து மாணவர்களுக்கு கவனத்தோடு கற்பிக்கவேண்டும் - இவற்றை விரைவு செய்யத் தளபாட வசதிகளையும்; இடவசதிகளையும் மக்கள் நலன் பேணும் ஒன்றியங்கள் ஏற்படுத்தித்தர முயலுதல் வேண்டும் - என்றார் திருமதி எஸ் மாசிலாமணி.*

தாளையடியிலிருந்து மீண்டபோது புதிய அநுபவம் வரவேற்றது.

**அறிவுத் தேடலில் ஆழியவளைக் கல்வியகம்**

பகல் பொழுது, கொடுமையான வெப்பநிலை; பிள்ளைகள் மரங்களின் கீழிருந்து பாடங்களை பயின்று கொண்டிருந்தனர்.

ஆழியவளை சி. சி. த. க. பாடசாலை 1885-ல் தோற்றுவிக்கப்பட்டது. 14-7-91ல் சிறிலங்கா வன்முறைப்படையெடுப்பால் இடம்பெயர்ந்து பின்பு செம்

பியன்பற்று றோ. க. த. க. பாடசாலையில் மாலை நேரத்தில் இணைந்து வந்து, 1992 முதல் வேறான இடத்தில் இயங்கி வருவதை அதிபர் து. இராசரெத்தினம் அவர்கள் கூறினார்.

இப்பாடசாலையில் 463 மாணவர்கள் உளர். 260 மாணவர்களுக்கே இடவசதியுள்ளது - மிகுதி 203 மாணவர்கள் மரங்களின் கீழ்தான்- 180 மாணவர்கள் தளபாட வசதியற்றோராயுள்ளனர் என்று தொடர்ந்தார் அதிபர்.

து. விஜயபாஸ்கர் (க. பொ. த. சா/த) ஆண்டு 11-

கையில் கிடைத்தவற்றோடு வந்த நாங்கள் கல்வித் துணைக்கருவிகளில்லா நிலையில் தரையிலிருந்தே படித்தோம். தினமும் உடைகளும், கொப்பிகளும் அழுக்காகும். ஒரு வகுப்பில் இரு பாடசாலை மாணவர்கள் இருந்தால் கூச்சலே அதிகமாகும். எம் வகுப்பின் நிலையை அறிந்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வேறாக ஓர் பாடசாலையை அமைத்தார்கள். தரையும் மரநிழலும் இன்றும் தொடரினும் இப்போது எம்மால் படிக்க முடிகிறது.

''நாங்கள் இருக்கும் ஏதிலிகள் தங்ககத்தின் அருகில் படிக்கக்கூடிய முறையில் எமக்கோர் இடம் அமைத்துதவி - எவராவது சிறு அளவிலாவது எரிபொருள் - தளபாடவசதி தந்திட்டால் எமது கல்வியும், கல்வியகமும் வளரும். இரவில் படிக்க முடியாது



வெற்றிலைக்கேணி கட்டைக்காடு ஆழியவளை ஆகிய இடங்களின் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள்

சிறு கொட்டிலுக்குள் அமிழ்ந்து அவியும் எங்களுக்கு- ஆண்களுக்கெனவும், பெண்களுக்கெனவுமென வேறு வேறாக படிப்பகம் அமைத்துதவினால் பரீட்சையில் சித்திபெற ஊக்கம் பிறக்கும். 9— 10— 11ம் ஆண்டு மாணவர்களின் கல்விக்கான உதவியாக இதைச் செய்தால் எங்களுடன் இருக்கும் ஆசிரியர்கள் 'இதற்கான ஒத்திசைவையும் உழைப்பையும் நல்குவார்கள்'' என்று சொன்னார் பத்தாம் ஆண்டு மாணவி தியாகராசா ரேவதி.

## வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.

திருமதி பா. சிதம்பரப்பிள்ளை அதிபராக இருக்கும் யா/வெற்றிலைக்கேணி றோ. க. த. க. பாடசாலையின் ஐந்தாம் ஆண்டு மாணவன் ஏ. ஜே. நட்சத்திரம் போல்; வெற்றிலைக்கேணியிலிருந்து 14. 2. 91ல் செம்பியன்பற்று றோ. க. பாடசாலையில் கல்வி கற்றதையும், பின்பு தங்களுக்கென்று புதிய பாடசாலை அமைத்ததையும் நினைவு படுத்தியதோடு - தற்போது ஆங்கிலம் கற்பித்த ஆசிரியை தம்மை விட்டுப் போனதைச் சொல்லிக் கவலைப்பட்டார்.

எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியை எம் கொத்தணி அதிபரின் பாடசாலையான வெற்றிலைக்கேணி பரமேஸ்வராவிற்கு மாற்றம் பெற்றுள்ளார். அவருக்கு அளிக்கப்படும் வேதனத்தைக் கூட எங்கள் பாடசாலையினூடாகவே வழங்குகின்றோம். ஏற்கனவே ஒரு நிரந்தர ஆங்கில ஆசிரியையும் ஓர் பகுதி நேர ஆங்கில ஆசிரியரும் தற்போது அங்குள்ள நிலையிலும், இங்கிருந்த ஆசிரியரும் அங்கு சென்றுள்ளார். இந்த இக்கட்டான நிலமையில் மாணவர்களின் குறையை நீக்க முடியாதுள்ளது என்று கூறிக் கொள்ளுகிறார் அதிபர்.


## வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்.

அடிப்படை வசதிகள் இல்லா நிலை - தனியாரின் சிறு இல்லத்தில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என உறவுக் குடும்பமாகச் செயற்படுகின்றனர் இப் பாடசாலையினர்.

1991ம் ஆண்டு யாழ் பல்கலைக் கழக விஞ்ஞான பீடமாணவர் ஒன்றியத்தின் இசைவுடன் சனி, ஞாயிறு நாட்களில் தமது நிர்வாகத்திற்குள் அமைந்த பாடசாலைகளில் 9- 10- 11ம் ஆண்டு மாணவர்களுக்கு பல்கலைக் கழக மாணவர்கள் கல்வியூட்டியதை சுட்டிக் காட்டினார் உடுத்துறைக் கொத்தணியின் அதிபரும் இவ்வித்தியாலத்தின் அதிபருமாகிய திரு. ந. அரியரெத்தினம் அவர்கள்.

தமிழில் தாம் கூடிய கவனம் எடுத்ததினால் தமது பாடசாலை மாணவர்கள் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றில் தமிழ் மொழியில் கூடிய புள்ளிகளைப் பெற்று வடமராட்சியிலேயே சாதனை படைத்தனர் என்றுரைத்தார். அதனைத் தொடர்ந்து விரிந்த பகற் பொழுது சரிந்து - மாலைக்காலம் மெல்லக் கோலம் போட்டது. வேலையில் தோய்ந்த எங்கள் குழுவினர் நாளைய நட்பைச் சிந்திக்கத் தொடங்கினர்.

(மிகுதி அடுத்த இதழில்)



## விடிவு எப்போதோ?

சாலை ஓரத்தில்
சாக்கடை விளிம்பில்
மழலைகள் அமைத்த
மணல் வீடோ?

ஒடிந்த கிடுகில்
ஒல்லித் தடியில்
உருவெடுத்த சிறு
கூடோ?

அங்கு
ஆடைகளின்றி
அம்மணமாக
அமர்ந்தவர்கள்
யாவரோ?
அகதிகளோ? இவர்கள்
அனர்த்தக்கும்
கூடவோ?

பாதகங்களில்
பாதுகாவலர்களைப்
பலி கொடுத்த
பாலகர்கள்
இவர்களோ?

இவர்களின் மேல்
பட்டினிப்பேயின்
பயங்கரப் பார்வை
பட்டுவிட்டதோ?
பிஞ்சு
பட்டுவிட்டதோ?
மதிமுகம் மூடிக்
கதி கலங்கிடும்
காரணம்
இதுவோ?
இந்த மண்ணில்
இனவாதத்தின்
இழிச் செயல்கள்
இவ்விதம் தொடருதோ?

நாளும் பொழுதும்
தம்மவர்கள்
படுகின்றபாட்டிற்கு
விடிவு
எப்போதோ?

சி. ஜெயவதனி,
சாவகச்சேரி.

## சருகுகள்

### விடிவு என்பது தூரமில்லை!

எங்கள் தேசத்தில்
வழமையாகிப் போன
நிகழ்வு இது!

கட்டடங்கள் இடிப்பதும்
கல்விக் கூடங்கள் அழிப்பதும்
அரச கரும நியதி!

குடிசைகளே வகுப்பர்ச்சு!
வகுப்பே இடம் பெயர்ந்தோர்
வீடாச்சு!

அதுவும் இன்று
அழிந்து போயாச்சு!

தலையில் கை வைப்பதனால்
செயலற்றுக் கிடப்பதனால்
காணப் போவது ஏதுமில்லை
செயற்பட்டால்
ஒன்றாக எல்லோரும் புறப்பட்டால்
விடிவு என்பது தூரமில்லை!

—அகிலா பசுபதி.

தெரிப்பு

## பெரும் பயன் அடைகிறேன்.

பலமாதங்களாக ஈழமண்ணில் வாடாது மலர்ந்து கொண்டிருக்கும் இனிய சாளரத்துடன் தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். 'பூமகிழத் தேன்சேர்க்கும் பொன்வண்டு' போன்ற சாளரத்தை தொடர்ந்து வாசிப்பதில் பெரும் பயன் அடைகிறேன்.

—கல்பனா கபிரியேல்பிள்ளை,
யா/கன்னியர் மடம் ம. வி.

□□

## தனித்துவமான இதழ்!

தங்கள் சஞ்சிகையில் வெளியாகும் ஏராளமான பொது விடையங்கள் படிக்க சுவையானதாகவும் தரமானதாகவும் சிந்தனையைத் தூண்டுவனவாகவும் அமைந்துள்ளன. சாளரம் தனித்துவமான சஞ்சிகையாக மிளிர்ந்து வருகின்றது. தங்கள்பணி தொடர வேண்டும்.

த. அன்னலட்சுமி
அக்கராயன் ம.வி.
கிளிநொச்சி.

□□

## மாதமொரு முறை வருமா?

சாளரத்தின் அன்மைய சில இதழ்கள் இருமாதங்களுக்கு ஒன்றாக வெளிவருவதை காணக் கூடியதாகவுள்ளது. மாதாமாதம் வெளியாகினால் எமக்கு மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருக்கும். எமது தொடர்ச்சியான தொடர்பினை சாளரத்துடன் பேணுவதற்கு முடிந்தவரை மாதமொரு முறை வெளியிட முயற்சி மேற்கொள்ளவும்.

சு. நிர்மலா
கல்வயல்.

**சாளரம்**
இளையோர் திங்கள் இதழ்




கதவு 3 (18) காற்றலை 3

சாளரம்
வேர்படி வீதி,
யாழ்ப்பாணம்

# பொது அறிவின் அவசியம்

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் தற்கொடையாளி தாய் பூபதி நினைவாக நடாத்தப்பட்ட பொது அறிவுத் தேர்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்குப் பாராட்டும், தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு வாழ்த்தும் தெரிவித்து தமிழீழ தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் 19-04-93 அன்று விடுத்த செய்தியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"கல்வி என்பது அறிவு சார்ந்தது. ஒருவன் தன்னைப்பற்றியும், தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்து கொள்வதற்கு கல்வி அத்தியாவசியமானது. கல்வியறிவு ஒருவனது ஆளுமையைச் சிறப்பிக்கிறது. அவனது வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது. அவனை முழுமனிதன் ஆக்கிவிடுகிறது.

இன்றைய அறிவியல் உலகம் விரைந்து, பரந்து வளர்ந்துவருகிறது. இந்த அறிவியல் அசைவியக்கத்தால் உலகத்தில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மனிதவாழ்வும் புரட்சிகரமாக மாறி வருகின்றது.

இந்த அறிவுசார் நவயுகத்தில், வரையறுக்கப்பட்ட துறைசார்ந்த படிப்புகள் ஒரு பரந்த உலகப் பார்வையையும், விரிந்த வாழ்வனுபவத்தையும் கொடுக்கப்போவதில்லை. எனவே துறைசார்ந்த பள்ளி, கல்லூரிப்படிப்புகளோடு பொது அறிவுத் திறனையும் எமது இளம்பரம்பரையினர் வளர்த்துக்கொள்வது இன்றியமையாதது. இது இன்றைய காலகட்டத்தின் தேவையும் கூட.

நாம் கற்கின்ற, அல்லது செயல்படுகின்ற துறை என்ற வரம்பிற்குள் மட்டும் நாம் ஒதுங்கி நின்றுவிடக்கூடாது. அதுவும் ஏட்டுக்கல்வியோடு நின்றுவிட்டால் வாழ்வின் முழுமையை நாம் தரிசித்துக்கொள்ள முடியாது. முழுமையான சமூக மனிதர்களாக வாழமுடியாது. அன்றாட வாழ்விற்கும், தேவைகளுக்கும் பயன்படும் வகையில் நாட்டின் நடப்பியல்புகளையும் உலகத்தின் போக்குகளையும் புரிந்துகொள்ளும் வகையில் நாம் எமது பொது அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம். அதுவே எம்மை சமூகத்திற்குப் பயனுள்ள மனிதர்களாக ஆக்கிவிடுகிறது."

தமிழீழ தேசிய தலைவர் குறிப்பிட்ட, பொது அறிவை வளர்க்கும் பணியில் சாளரம் தன்னாலான பங்களிப்பை செய்து வருகின்றது.

எம்மைப் பற்றி, நாம் வாழும் சூழல் பற்றி, எமது மொழி, பண்பாடு வளம் பற்றியெல்லாம் அறிந்துகொள்வதும் பொது அறிவேயாகும்.

பலர் செயற்கைக் கோள்கள், கணினிகள் பற்றி அறிவதையே பொது அறிவு என நினைக்கின்றார்கள்.

பலருக்கு அணுகுண்டுக்கு பயன்படுத்தப்படும் கணநீர் பற்றிய விபரங்கள் தெரியும். எம் அருகே எம் முயற்சியின்றி வளர்ந்து தனது தலை முதல் கால் வரை பயன் தரும் பனை பற்றி தெரியாது. அது தரும் பயன்களில் ஒன்றான பதநீர் பற்றியும் அதன் மூலம் இன்றைய எமது தேவைக்கு பெறக்கூடிய பயன்பாடு பற்றியும் தெரியாது.

பெறப்படும் பொது அறிவு பயனற்ற பொது அறிவாக இருக்கக்கூடாது.

கணநீர் பற்றி அறிய விரும்பும் நாங்கள் முதலில் பதநீர் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வோம். □

‘அன்னம்ஸ்’ ரான்ஸ்போர்ட் சேவிஸ்

நம்பிக்கை !

உத்தரவாதம் !!

பாதுகாப்பு !!!

இம்மூன்றையும் உறுதிப்படுத்துவது
எமது சேவை

(தேங்காய் சில்லறை, மொத்த விற்பனையாளர்)

‘அன்னம்ஸ்’ ரான்ஸ்போர்ட் சேவிஸ்

சந்தையடி - சங்கானை

நெல்லை தரமான, சுவையான
அரிசியாக்குவதில்

அரிசி ஆலைகளின் செயல்பாடு முக்கியம் வாய்ந்தது.

## தரமான அரிசி வகைகளை வழங்குவதில்
## கிளிநொச்சியில்
## பெயர் பெற்ற நிறுவனம்

**'எம் - எம் - பி - அரிசி ஆலை'**

இதுவரை தொடர்பு கொள்ளாதோர்

ஒரு முறை வந்து பாருங்கள்.

# எம் - எம் - பி - அரிசி ஆலை

**யாழ் வீதி, கிளிநொச்சி.**